Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 253

வியாழக்கிழமை
07 ஓகஸ்ட் 2025

ஆடி 22 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

## ஹேமச்சந்திர புலிகளுடன் தொடர்பாம்

கொழும்பு, ஓக. 7
தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் பிரதி வெளிவிவகார அமைச்சரான அருண் ஹேமச்சந்திரவுக்கு விடுதலைப் புலிகள் அமைப்புடன் நெருக்கமான 15

## யாழ்ப்பாணத்தில் மீண்டும் மலேரியா

யாழ்ப்பாணம், ஓக. 7
யாழ்ப்பாணத்தில் மீண்டும் மலேரியாக் காய்ச்சல் பரவியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மலேரியாக் காய்ச்சல் காரணமாக இருவர் 15



### மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில்

# காற்றாலைப் பாகங்கள் மன்னாருக்குள் நுழைவு

## இரவிரவாகப் பெரும் பதற்றம்

**மன்னார், ஓகஸ்ட் 7**
**மன்னாரில் இரண்டாம் கட்டமாகக் காற்றாலைக் கோபுரங்களை அமைப்பதற்கான பாகங்களுடன் வந்த வாகனங்கள் பெரும் எதிர்ப்புக்கும், பதற்றத்துக்கும் மத்தியில் தலைமன்னாருக்குள் நேற்று அதிகாலை நுழைந்தன.** 15

## கிளிநொச்சியில் விபத்து குடும்பத்தலைவர் பலி!

கிளிநொச்சி, ஓக. 7
கிளிநொச்சியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
55 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
ஏ-9 வீதியில், கிளிநொச்சி பழைய மாவட்டச் செயலகத் 15



### மன்னாரில்

## காற்றாலைக்கு எதிராக இளையோர் போராட்டம்

மன்னார், ஓக. 7
மன்னார் மாவட்டத்தில் பல் தேசிய நிறுவனங்களின் இல்மனைட் அகழ்வுத் திட்டத்துக்கு எதிராக, 'கருநிலம் பாதுகாப்பு' என்ற தொனிப் பொருளில் நேற்றுப் 15

## பயங்கரவாதத் தடைச்சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும்

### பதில் சட்டங்கள் தேவையில்லை கோடீஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 7
பயங்கரவாதத் தடைச்சட்டம் முற்றுமுழுதாக நீக்கப்பட வேண்டும். அதற்குப் பதிலாக எந்தவொரு புதிய சட்டமும் கொண்டுவரப்படக்கூடாது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார். 15

### பொத்துவில் - பொலிகண்டி பேரணி

## மல்லாவி பொதுமக்களுக்கு எதிரான வழக்கு தவணை!

கிளிநொச்சி, ஓக. 7
பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான நடைபயணப் போராட்டத்தில் கலந்து கொண்ட மல்லாவி வர்த்தகர்கள், மல்லாவி இளைஞர் 15



## சஷீந்திர ராஜபக்ச கைது

விரிவு பக்:- 07

## செம்மணிப் புதைகுழியில் மேலும் 6 என்புத்தொகுதிகள்

விரிவு பக்கம்:- 15

**முச்சந்தி முரளி**

'எல்லாத்துக்கும் பின்னால ஏதோ அரசியல் ஒண்டு ஒளிச்சிருக்கு கண்டியளோ'

## சிசுவின் என்புத்தொகுதி செம்மணியில் மீட்பு!

யாழ்ப்பாணம், ஓக. 7
செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து பச்சிளம் சிசுவின் என்புத் தொகுதியொன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது.
சிசுவின் என்புத்தொகுதி உடையும் நிலையில் மிகப் பலவீனமாக இருந்ததால், என்புத் தொகுதியைச் சுற்றியிருந்த மணல் பிடிமானங்களுடன் இணைந்த வகையில் சுற்றிக் கட்டப்பட்டு, அது பத்திரமாக மீட்கப்பட்டது. (அ-ம-26)



## அகழ்வுப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தம்

விரிவு பக்கம்:- 15

## செருப்பு, தாயத்துடன் என்புத்தொகுதிகள் மீட்பு

விரிவு பக்கம்:- 15

மக்கள் ம… …ழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| லொத்தர் | திகதி | சீட்டிழுப்பு இலக்கம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | மேலதிகம் |
|---|---|---|---|---|---|
| கொவிசெத | 06.08.2025 | 4155 | K | 29 62 69 70 | விசேட எழுத்து K |
| ஹந்தஹன ராசி சுப பலன் | 06.08.2025 | 1222 | | 24 31 39 52 | வெற்றி இலக்கினம் சிம்மம் |
| NLB ஜய | 06.08.2025 | 0181 | K | 7 8 7 1 | |
| மெகா பவர் | 06.08.2025 | 2261 | X | 39 40 55 56 | சுப்பர் இலக்கம் 21 |
| மஹஜன சம்பத | 06.08.2025 | 5913 | J | 9 3 5 9 5 7 | |
| தன நிதானய | 06.08.2025 | 1943 | N | 11 19 50 56 | விசேட எழுத்து N |
| அத சம்பத | 06.08.2025 | 0488 | J | 5 9 5 7 | |
| சுப தவசக் | 06.08.2025 | 0029 | | 04 14 36 43 | வெற்றி இலக்கினம் துலாம் |

# சட்டச்சிக்கல்கள் தீர்ந்தால் தேர்தலை உடன் நடத்தலாம்

## தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஓக.7

**எல்லை நிர்ணயம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்ட போதும், அதற்கு இதுவரை நாடாளுமன்றத்தின் அனுமதி கிடைக்கவில்லை. இந்தச் சட்டச்சிக்கல்கள் தீர்க்கப்படும்போது மாகாணசபைத் தேர்தலை எந்தச் சந்தர்ப்பத்திலும் நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தயாராக உள்ளது என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

மட்டக்களப்பு மாவட்டத் தேர்தல்கள் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்தல்கள் ஆணைக்குழுவின் மூலோபாயத்திட்டம் தொடர்பான கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தேர்தல் முறையில் காணப்படும் சில குறைபாடுகளை நீக்கி புதியசட்டதிட்டங்களைக்கொண்டு வருதல், நவீன தொலைத்தொடர்பு வசதிகளுக்கு ஏற்ப எதிர்காலத்தில் நடைபெற இருக்கும் தேர்தல் மற்றும் வாக்காளர் இடாப்பில் புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல் போன்ற பல விடயங்கள் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டன. (எ-இ)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 06.08.2025 |
| தினம் | புதன்கிழமை |
| வெற்றி வாரம் | 0621 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கம் | 7 3 9 4 2 8 |

| Super Ball | |
|---|---|
| திகதி | 06.08.2025 |
| தினம் | புதன்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2887 |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கம் | 09 16 29 80 |

| சனிதா | |
|---|---|
| திகதி | 06.08.2025 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கம் | 17 20 58 80 |
| வெற்றி வாரம் | 5048 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 06.08.2025 |
| தினம் | புதன்கிழமை |
| தனுசு | ♐ |
| வெற்றி இலக்கம் | 16 17 32 59 |
| சீட்டிழுப்பு வாரம் | 4599 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 06.08.2025 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | K |
| சுப்பர் இலக்கம் | 03 |
| வெற்றி இலக்கம் | 08 28 48 68 |
| வெற்றி வாரம் | 2063 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 06.08.2025 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கம் | 06 42 59 73 |
| வெற்றி வாரம் | 2713 |

| JAYODA | |
|---|---|
| திகதி | 06.08.2025 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கம் | 10 11 32 53 |
| வெற்றி வாரம் | 2150 |

# சிறப்புரிமையை நீக்குவது அரசியல் பழிவாங்கல்

## மஹிந்த குற்றச்சாட்டு



கொழும்பு, ஓக.7

முன்னாள் ஜனாதிபதிகளுக்குரிய வரப்பிரசாதத்தை நீக்குவதானது அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை என்று மஹிந்த ராஜபக்ச குற்றஞ்சாட்டியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிகளுக்குரிய வரப்பிரசாதங்கள் மற்றும் சிறப்புரிமைகளை நீக்குவதற்கு அரசாங்கம் தயாராகிவருவது தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மஹிந்த இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வரப்பிரசாதங்களை நீக்குவது எனக்குப் பிரச்சினை இல்லை. மக்களின் வரப்பிரசாதம் தான் எமக்கு முக்கியம். அதைவிட மேலானது எதுவும் இல்லை. மக்கள் ஆதரவு இருக்கும் வரை எந்தவொரு வரப்பிரசாதத்தை நீக்கினாலும் பரவாயில்லை. விஜேராமவில் உள்ள மாளிகையைவிட மெதலுமனவில் உள்ள வீடு சிறப்பானது- என்றார். (எ-44)

# அரச கட்டமைப்பை மீட்க அடுத்த பட்ஜெட்டில் நிதி

## ஜனாதிபதி அநுர தெரிவிப்பு



கொழும்பு, ஓக.7

பௌதீக மற்றும் ஆன்மீக ரீதியாக சிதைந்த அரச கட்டமைப்பை மீட்டெடுக்கவும், நவீன அரச சேவையை உருவாக்கவும் அடுத்த ஆண்டு வரவு- செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.


நேற்றுமுன்தினம் நடைபெற்ற இலங்கை நிர்வாக சேவைச் சங்கத்தின் வருடாந்த மாநாட்டில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அரசாங்க ஊழியர்களின் சம்பள உயர்வுக்காக 2026 மற்றும் 2027ஆம் ஆண்டுகளில் தலா 11 ஆயிரம் கோடி ரூபா ஒதுக்கப்படும். சமூக விழுமியங்களுக்கு முன்னுரிமை அளிக்கும் அதிகாரிகளை உருவாக்க வேண்டும். அரச சேவையை கவர்ச்சிகரமாகவும், மக்கள் மயமாகவும் மாற்ற அரசு உறுதிபூண்டுள்ளது. அதற்கு அதிகாரிகளின் அர்ப்பணிப்பு அவசியம்- என்றார். (எ-இ)

# மக்கள் பணத்தில் வாழ வெட்கமாக இல்லையா?

## சுனில் ஹந்துன்நெத்தி காட்டம்



கொழும்பு, ஓக.7

ஓய்வுபெற்ற பின்பும் மக்களின் நிதியில் வாழ்வதற்கும் அரச வீடுகளில் வாழ்வதற்கும் ஆசைப்படும் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு இது தொடர்பில் வெட்கமில்லையா? என்று அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

முன்னாள் ஜனாதிபதிகள் ஓய்வுபெற்றதன் பின் வாழ்வதற்கு, குடும்ப வாழ்க்கை நடத்துவதற்கு அவர்களிடம் எதுவும் இல்லையா? பணம், வீடு என எவையும் இல்லையா? ஜனாதிபதி பதவி ஊடாகத் தான் சாப்பிடவேண்டுமா? நாட்டுமக்களின் நிதியில் தான் அவர்கள் வாழவேண்டுமா? ஓய்வு பெற்றதும் மக்கள்தானா அவர்களுக்குச் சோறு போட வேண்டும்? இது வெட்கப்படவேண்டிய விடயம் அல்லவா. எளிமையாக வாழ்கின்ற ஜனாதிபதி ஒருவர் இருக்கிறார்.

அமைச்சர்கள் இருக்கிறார்கள். அவர்களைப் பார்த்தாவது இவர்கள் திருந்தவேண்டும். நாங்கள் ஓய்வுபெற்றால் இப்படிச் செய்யமாட்டோம். ஒரு நிமிடம் கூட இருக்கமாட்டோம். வெளியேறுவோம்- என்றார். (எ-75)

# சோமரத்ன ராஜபக்சவின் பாதுகாப்பைப் பலப்படுத்துக

## அவரது சகோதரி கோரிக்கை

கொழும்பு, ஓக.7


சோமரத்ன ராஜபக்சவுக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் ஏற்படக்கூடும் என்பதால் அவரது பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்கு சிறைச்சாலை அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அவரது சகோதரியான ரோஹிணி ராஜபக்ச வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

செம்மணி தொடர்பாக சர்வதேச விசாரணை முன்னெடுக்கப்பட்டால் சாட்சியமளிக்கத் தயார் என்று சோமரத்ன ராஜபக்ச தெரிவித்துள்ளார். போர்க்காலத்தில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற படுகொலைகள் மற்றும் நடத்தப்பட்டுவந்த சித்திரவதைக்கூடங்கள் என்பன பற்றிய விவரங்களை வெளியிடுவதற்குத் தயாராக உள்ளார் என்று அவரது மனைவி ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. சிறையில் இருக்கும் எனது சகோதரருக்கு இதனால் உயிர் அச்சுறுத்தல் ஏற்படக்கூடும். அவரது பாதுகாப்பைப் பலப்படுத்த சிறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும். இது தொடர்பாக அரசாங்கம் அவதானம் செலுத்தவேண்டும் - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் எட்டாம் திருவிழா நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. எட்டாம் திருவிழாவின் மாலைத் திருவிழாவின்போது, முருகப் பெருமான், வள்ளி தெய்வானை ஆகியோர் மகர வாகனத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருட்காட்சியளித்தனர். (ச-66)

## வரலட்சுமி விரத பூஜை

யாழ்ப்பாணம், ஓக.7
வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் வரலட்சுமி விரத பூஜை வழிபாடுகள் நாளை வெள்ளிக்கிழமை காலை 7 மணி முதல் பக்திபூர்வமாக இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலனசபையினர் தெரிவித்துள்ளனர். (ச-25, 66)

## தெய்வீகக் கூட்டத் தொடர் பத்தாம் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக.7
நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் முன்னெடுக்கும் தெய்வீகத் திருக்கூட்டத் தொடரின் பத்தாம் நாள் நிகழ்வு, நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை, மாலை 4 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

வேதாந்த மடம், ஸ்ரீ சிவகுருநாதபீட 8 ஆவது குருபீடாதிபதி வணக்கத்திற்குரிய ஸ்ரீ வேதவித்தியாசாகரர் சுவாமிகள் திருமுன்னிலை வகிக்க, ஊரெழு, மீனாட்சி அம்மன் ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ கிருஷ்ண. சோதீஸ்வரக் குருக்கள் தலைமையில் இத்திருக்கூட்ட நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதன்போது கலை நிகழ்வுகளை உடுவில் பிரதேச செயலகப் பிரிவின் இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் அறநெறிப்பாடசாலை மாணவர்கள் வழங்கவுள்ளனர்.

வரவேற்புரையினை இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்கள யாழ்ப்பாணம், நாவலர் கலாசார மண்டப அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி ஜீவிதா ஆனந்தராசா அவர்கள் வழங்கவுள்ளார்கள்.

சிறப்புக் கலை நிகழ்வாக, செல்வி தேவசேனா விஜயகுமார சர்மாவின் வீணையிசை நிகழ்வும் லாஸ்யமதி கலைமன்ற மாணவர்கள் வழங்கும் நடன நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (ச)




நல்லூர்க் கந்தசுவாமி கோவிலின் வருடாந்தத் திருவிழாவை முன்னிட்டு பருத்தித்துறை வீதியில் ஆனைப்பந்திச் சந்திக்கு அருகில் பெரியளவிலான தண்ணீர்ப்பந்தல் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. (ச-25,17)

## தெய்வீக அர்ச்சனை

யாழ்ப்பாணம், ஓக.7
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர்க் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு நடத்தும் "தெய்வீகக் கலை அர்ச்சனை" நிகழ்வில் இன்று வியாழக்கிழமை நயினை பொன்கேசன் பஜனைக் குழுவினரின் பஜனை நிகழ்வும், பன்னாலை பெரியதம்பிரான் பஜனைக் குழுவினரின் பஜனை நிகழ்வும், நுண்கலைமாணி கஜப்பிரியா சிவபாலசுப்பிரமணியத்தின் வீணை இசை நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

கடந்த 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகிய இந்த நிகழ்வு எதிர்வரும் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தினமும் காலை 10 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ச-41)



## ஆன்மீக உரையும் உதவி வழங்கலும்

யாழ்ப்பாணம், ஓக. 7
சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வு ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் சித்தவைத்தியத்துறை மருந்தாளரும், நேர்முக வர்ணனையாளருமான த.தவநேசன் கலந்துகொண்டு "ஞானவேல் " எனும் தலைப்பில் ஆன்மீக உரை ஆற்றினார். தொடர்ந்து யாழ்.அளவெட்டி அருணாசலம் வித்தியாலய நிர்வாகத்தின் கோரிக்கைக்கமைவாக மாணவர்களுக்கான புதிய கழுத்துப்பட்டிகளுக்காக 50 ஆயிரம் ரூபா நிதியுதவி சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் வழங்கப்பட்டது. (ச-41-66,17)



உதயா
ஜுவல்லர்ஸ்
இல. 79G, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 4434, 021 221 6877




## திருமஞ்சம் காணவாரீர்

சரவணபவ, சண்முகா, கந்தா,
நல்லை அலங்காரக் கந்தா
திருமஞ்சம்தனை அரோகரா
என பக்தர்கள் இழுக்க
பாவவினைகள் பறந்தோடும்
முத்துக்குமரன் வள்ளி, தெய்வானையுடன்
கேட்டவரம் தருவான் நல்லையம்பதியில்
திருமஞ்சம் காணவாரீர்

நல்லை ஆனந்தன்

## தமிழ் நல்லைப்பதியின் திருமஞ்சமேறி வருக!

தமிழ் வடிவாய் வந்த தலைவனே
திருமஞ்சமேறி வருக!
தமிழ்க் குடியைக் காக்கின்ற இறைவனே
திருமஞ்சமேறி வருக!
உமையென்றும் உளம் மறவா உயிரே
திருமஞ்சமேறி வருக!
ஓம் என்ற மந்திரத்தின் உணர்வே
திருமஞ்சமேறி வருக!
இமைத்திடு முன் எம் கவலை தீர்ப்பவனே
திருமஞ்சமேறி வருக!
தமிழ்க் கவிதை தனில் பிறந்த தலைவா
திருமஞ்சமேறி வருக!
தனை வணங்கும் யாவர்க்கும் அருள
தமிழ் நல்லைப்பதியில் மஞ்சமேறி வருக!

மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிலும் பொறுமை அவசியம். செலவுகளை சமாளிக்கத் தேவையான பணம் இருப்பதால் பிரச்சினை எதுவும் இருக்காது. புதிய முயற்சிகளில் நன்றாக யோசித்து இறங்கவும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படக் கூடும். உணவு விஷயத்தில் கவனமாக இருக்கவும். உறவினர்கள் வருகையால் வீட்டில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொறுமை அவசியம்.

**மிதுனம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். உடல்நலனில் கவனம் தேவை. உறவினர்கள் உதவி கேட்டு வருவார்கள். வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகையால் உற்சாகம் ஏற்படும்.

**கடகம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். ஆனால், புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். செலவுகள் ஏற்படும். ஆதாயம் உண்டாகும். மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். பணிச்சுமை அதிகரிக்கும்.

**சிம்மம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர் செலவுகளால் கையிருப்பு குறையும். குடும்பம் தொடர்பான முடிவுகள் எதுவும் எடுக்கவேண்டாம். சக ஊழியர்களை அனுசரித்துச் செல்லவும்.

**கன்னி:** எந்த முடிவையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்லவும். சிறு பிரச்சினை ஏற்படக்கூடும். பொறுமை அவசியம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**துலாம்:** உற்சாகமாகவும் பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற செலவு செய்ய நேரிடும். கையிருப்பு கரையும். உங்கள் பொறுப்புகளைப் பகிர்ந்துகொள்வது ஆறுதலாக இருக்கும்.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றிகரமாக முடியும். உறவுகளால் எதிர்பாராத ஆதாயம் ஏற்படக்கூடும். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் சக வியாபாரிகளால் சிறு சங்கடங்கள் ஏற்படலாம்.

**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். அலைச்சலுடன் ஆதாயமும் இருக்கும். பிள்ளைகளின் திடீர்ப் பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. அலுவலகத்தில் அதிகாரிகளின் ஆலோசனை பயன் தருவதாக இருக்கும்.

**மகரம்:** எதிலும் அவசரமில்லாமல் செயற்படவேண்டிய நாள். வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். செலவுகள் ஏற்படக்கூடும். கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும்.

**கும்பம்:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படக்கூடும். அன்றாடப் பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. வீண் விவாதங்கள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**மீனம்:** புதிய ஆடை, ஆபரணங்களை வாங்கும் யோகம் உண்டாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

## 2025 ஆம் ஆண்டின் மிகவும் மதிப்புவாய்ந்த வணிக நாமமாக மகுடம் தரித்தது

# இலங்கை வங்கி!

இலங்கை வங்கியானது Brand Finance Lanka நிறுவனத்தினால் 2025 ஆம் ஆண்டிற்கான மிகவும் மதிப்புவாய்ந்த வணிக நாமமாகப் பெயரிடப்பட்டுள்ளது. இந்த வகையில் இலங்கை வங்கி என்ற நாமம் ரூபாய் 57.4 பில்லியன் மதிப்பினைக் கொண்டிருப்பதோடு கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது இம்மதிப்பு 14.3%ஆல் உயர்ந்துள்ளது.

Brand Finance Lanka நிறுவனமானது உலகின் முன்னணி சுயாதீன வணிக நாம மதிப்பு மற்றும் மூலோபாய ஆலோசனை நிறுவனமான Brand Finance UK நிறுவனத்தின் துணை நிறுவனமாகும். இந்த நிறுவனமானது ஒரு வணிக நாமத்தின் முதலீடு, அதன் உரிமைப் பங்கு மற்றும் செயற்திறன் என்ற மூன்று அடிப்படைகளின் மீது கட்டியெழுப்பப்பட்ட விரிவான ஓர் முறையியலின் ஊடாக ஆண்டுதோறும் பிரபலமான வணிக நாமங்களை மதிப்பிடுகின்றது. இதன் தரப்பட்டுத்தல்கள் வெளிப்படையானதும் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டதுமான வணிக நாம மதிப்பிடல் செயன்முறையின் ஊடாக விரிவான நிதி சார் பகுப்பாய்வுகளையும் சுயாதீனமான வாடிக்கையாளர் கருத்துக்கணிப்புகளையும் ஆதாரமாகக் கொண்டவை.

இலங்கையின் மிகவும் மதிப்புக்குரிய வணிக நாமமாகத் திகழ்வது என்பது வெறுமனே வருவாய் உருவாக்கத்தின் பாற்பட்டது அல்ல. மாறாக இலங்கை வங்கியின் வெற்றி அதன் வினைத்திறன் மிக்க வணிக மேம்பாட்டு நடவடிக்கைகள், வலுவான சமூக ஊடக ஈடுபாடு, ஆகச் சிறந்த வாடிக்கையாளர் சேவை, துரிதமான டிஜிட்டல் மயமாக்கம், நிலைபேறாண்மை, மக்களின் வரவேற்பு என்பவற்றினால் விளைந்ததாகும். மேற்குறித்த துறைகளில் சிறந்து விளங்கியதன் மூலம் இலங்கை வங்கி தனது நிதிப் பலத்தை மட்டுமல்லாமல் இலங்கை மக்களுடன் வலுவானவோர் உணர்வு ரீதியான பிணைப்பையும் கட்டியெழுப்பியது. மக்களுடனான ஆழமான பிணைப்பின் காரணமாகவும் அதன் தளராத ஈடுபாட்டுறுதியின் காரணமாகவுமே இலங்கை வங்கியால் நாட்டின் பொருளாதார, சமூக, அரசியல் நெருக்கடிகளில் இருந்து இன்னும் பலத்துடன் மீண்டெழ முடிந்தது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல், கொவிட் பெருந்தொற்று, பொருளாதார நெருக்கடி, எரிபொருள் பற்றாக்குறை, நிலையில்லா அரசியல் என்பவற்றின் காரணமாக நாடு அதல பாதாளத்தில் விழுந்திருந்த நேரத்திலும் இந்நாட்டை மீட்டெடுக்கும் தலையாய பணியை இலங்கை வங்கி தன் தலைமேற்கொண்டது. அந்த வகையில் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளையும் இளையோர் மற்றும் பெண்களால் நடாத்தப்படும் வியாபாரங்களையும் ஊக்குவிக்கும் நோக்கில் இலங்கை வங்கி அதன் வியாபாரப் புத்துயிர்ப்பு மற்றும் மறுசீரமைப்புப் பிரிவின் ஊடாக பல முக்கியமான முன்னெடுப்பு களை மேற்கொண்டது.

இலங்கை வரலாற்றின் மிக மோசமான காலகட்டத்தில் எமது மக்களைத் தாங்கிப்பிடிப்பதற்கும் வேலை வாய்ப்புகளைப் பாதுகாப்பதற்கும் இம்முன்னெடுப்புகள் பேருதவியாக அமைந்திருந்தன.

ஏற்றுமதித் துறையைப் பொறுத்தவரை, விவசாய உற்பத்திகளை மேம்படுத்தி உலக சந்தையில் வங்கியின் போட்டித்திறனை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கை வங்கி உயர் தொழில்நுட்ப விவசாய ட்ரோன்களை அறிமுகம் செய்துள்ளது. இவ்வாறு இந்நிகழ்ச்சிகள் அனைத்தும் வங்கிக்கு நிதிசார் வெற்றிகளை ஈட்டித் தந்தது மட்டுமல்லாமல் நாட்டு மக்களுடன் நற்பிணைப்பையும் உண்டாக்கின.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த இலங்கை வங்கியின்







தலைவர் திரு. காவிந்த டி சொய்சா அவர்கள் 'இலங்கை வங்கியாகிய நாம் எம்மை வெறுமனே ஒரு நிதி நிறுவனமாக அல்லாது அனைத்து மக்களையும் உள்ளடக்கிய தேசிய வளர்ச்சிக்கான பெரும் உந்து சக்தியாகவே பார்க்கின்றோம்' என்றார். மேலும் அவர் கூறுகையில் 'இம்மாதிரியான தொடர்ச்சியான அங்கிகாரங்களும் சாதனைமிகு எமது செயற்திறனும் நாட்டுக்கு உழைத்தல் எனும் எமது உன்னத இலட்சியத்தைக் காட்டிநிற்கின்றன. இவ்வெற்றியானது எமது நம்பிக்கைக்குரிய வாடிக்கையாளர்களுக்கும் வங்கியின் குறிக்கோளையும் பெருமையையும் உயர்த்திப் பிடிக்கும் எமது பணியாளர்களுக்கும் உரித்தாகும்' என்று கூறினார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த இலங்கை வங்கியின் பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி திரு. ரசல் பொன்சேகா அவர்கள் இவ்வெற்றியானது சிறப்பான செயற்திறன் மற்றும் தெளிவான மூலோபாயம் பற்றிய தூரநோக்கு என்பவற்றின் பயனால் விளைந்தது என்றார். 'தொழில்நுட்பத்தை மனித வலுவுடன் இணைத்தும் உலகளாவிய வங்கியில் பற்றிய அறிவை எம்மவரின் ஈடுபாட்டு உறுதியுடன் இணைத்தும் நாம் எமது நிறுவனத்தை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச்சென்றது மட்டுமல்லாமல் இந்நாட்டின் வியாபாரங்களையும் வாழ்வாதாரங்களையும் மாற்றியமைத்துள்ளோம்' என்று மேலும் கூறினார். அனைத்து விதமான டிஜிட்டல் வங்கிச் செயற்பாடுகளையும் ஒரு கைப்பேசி செயலியின் கீழ் வழங்கும் BOC Flex எனும் எமது புத்தம் புதிய செயலி டிஜிட்டல் மயமாக்கலில் நாங்கள் கொண்டுள்ள ஈடுபாட்டு உறுதிக்கு மிகச் சிறந்த சான்றாகும்.

நாடு முழுவதும் 2300இற்கும் மேற்பட்ட சேவை மையங்களையும் 660 கிளைகளையும் கொண்டிருக்கும் இலங்கை வங்கி சர்வதேச ரீதியிலும் தனது சேவைகளை விரிவுபடுத்தியுள்ளது. அந்த வகையில் இங்கிலாந்தின் லண்டனில் ஒரு துணை நிறுவனத்தையும், மாலே, ஹூல் ஹூமாலே, சென்னை, சீஷெல்ஸ் ஆகிய நகரங்களில் கிளைகளையும் நிறுவி செயற்பட்டுவருகிறது.

இலங்கையின் மதிப்புக்குரிய வணிக நாமம் என்ற இந்த அங்கீகாரம் என்பது வெறுமனே வங்கியின் சந்தை ஆதிக்கத்தை அல்லாது கடந்த தசாப்தங்களாக அது மக்கள் மத்தியில் பெற்றிருக்கும் நம்பிக்கையையும், அதன் விடா முயற்சி யையும், தேசிய முக்கியத்துவத்தையும் காட்டுகின்றது.

இந்த அங்கீகாரம் தவிர இலங்கை வங்கியானது ஐக்கிய இராச்சியத்தின் 'த பாங்கர்' சஞ்சிகையால் உலகின் ஆகச் சிறந்த 1000 வங்கிகளுள் இடம் பிடித்த இலங்கையின் முதலாவது வங்கியென்றும் 2021, 2023, 2024 ஆகிய ஆண்டுகளின் ஆகச்சிறந்த வங்கி என்றும் ஆசியாவிலேயே ஆண்டின் சிறந்த இஸ்லாமிய சில்லறை வங்கி என்றும் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## சிறார்களுக்கான விளையாட்டுப்போட்டி

பேசாலை புனித வெற்றி அன்னை ஆலயப் பங்கின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் சென்.மேரிஸ், அமலதாசன் மற்றும் விக்றரீஸ் ஆகிய மூன்று முன்பள்ளிகளில் கல்விபயிலும் சிறார்களுக்கான வருடாந்த விளையாட்டுப்போட்டி பேசாலைப் பங்குத்தந்தை அருட்பணி எஸ்.சத்தியராஜ் அடிகளார் தலைமையில் ஆலய முன்றலில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. (ச-25,60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு அலுவலர்களுக்கிடையே இடமாற்றத்தில் பக்கச்சார்பு

## வடக்கு அரச சேவைப் பட்டதாரி உத்தியோகத்தர்கள் சங்கம் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், ஓக.7**

**வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளரினால் வெளியிடப்பட்டுள்ள NP/04/2025ஆம் இலக்க இணைந்த சேவை உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்றம் 2026 சுற்றறிக்கையின்படி அலுவலர்களுக்கிடையில் பக்கச்சார்பான இடமாற்ற ஏற்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதனால் நிர்வாக ரீதியான முறைகேடுகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன என்று வடக்கு அரச சேவைப் பட்டதாரி உத்தியோகத்தர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.**

இதுதொடர்பில் அந்தச் சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளதாவது:-

தற்போதுவரையில் தமது சேவைக்காலத்தில் ஒரு முறைகூட வெளிமாவட்டங்களில் சேவை புரியாத 60 க்கும் அதிகமான அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் காணப்படுகின்றனர்.

எனினும் மேற்படி 'குறிப்பு 7' இல் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தமது சேவைக்காலத்தில் 12 வருடங்கள் சுழற்சிமுறையில் 5 வருடங்கள், 3 வருடங்கள் எனும் அடிப்படையில் சேவையாற்றவேண்டிய தேவை அவசியமாகின்றது என அந்தச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் செயற்பாட்டின்மூலம், நிர்வாக உயரதிகாரிகளின் உறவினர்கள். சுற்றத்தார்கள். நெருக்கமான உத்தியோகத்தர்கள் மற்றும் உயரதிகாரிகளின் ஊழல்களுக்குத் துணைபோகும் உத்தியோகத்தர்கள் தமது சேவைக்காலத்தில் ஒருமுறைகூட சொந்த மாவட்டம் தவிர்ந்த பிற மாவட்டங்களில் சேவைபுரிந்துவராத நிலையில் தமது சேவையைப் பிறமாவட்டங்களில் மேற்கொண்டிருப்போர் மீளவும் வெளிமாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட நிர்ப்பந்திக்கப்படுவர். உயர்நிலைச் சம்பளங்களையும் வீட்டு வசதிகளையும் கொண்டிருக்காத மற்றும் உயரதிகாரிகளிடத்தில் செல்வாக்குமற்ற சாதாரண நிலையிலுள்ள பல உத்தியோகத்தர்கள் தாம் பெறுகின்ற சம்பளத்தில் பாதியை வீட்டு வாடகைக்கு அல்லது போக்குவரத்துக்கு செலவு செய்து வாழ்நாளில் பாதிக்காலத்தை சிரமமான வாழ்க்கைமுறையொன்றுக்குள் தள்ளப்படுவர்.

பொருளாதாரத்தில் மட்டுமல்லாமல் வாழ்க்கைக்கும் தொழிலுக்குமான சமநிலையைப் பேண முடியாத உத்தியோகத்தர்கள் உள,உடல் நலனிலும் நலிவுற்று தமது ஆயுட்காலத்தை இழப்பர்.

அரச நிர்வாகத்தில் நிலைநாட்டப்படவேண்டிய நீதி மறுக்கப்படுவதும் அதற்கான மாற்றுவழியாக இலஞ்சமும் ஊழலும் நிறைந்த அரச சேவை ஒன்றை ஸ்தாபிப்பதற்கும் இது வழி வகை செய்யும்.

அறிவியல் ரீதியற்றதும் ஆய்வுக்கு உட்படுத்தப் படாததுமாகியமுறையில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளமை பற்றி உரிய தரப்பினருக்கு எம்மால் அறிவிக்கப்பட்டிருந்தும் அதுதொடர்பில் பாராமுகமாகச் செயற்பட்டு வருகின்றனர்.

எனவே எமக்கு இந்த விடயத்தில் நீதியான தீர்வு கிடைக்கவேண்டும்- என்றுள்ளது. (ச-இ)

### அத்துமீறிய மீன்பிடி
# தமிழக மீனவர்கள் நால்வர் கைது

யாழ்ப்பாணம், ஓக.7

நெடுந்தீவு கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நான்கு இந்திய மீனவர்கள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையினர் மேற்கொண்ட சுற்றுக்காவல் நடவடிக்கையின் போது இந்தக் கைது இடம்பெற்றது.

இதன்போது அவர்கள் பயன்படுத்திய படகொன்றும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட மீனவர்களை ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-20)



# கிளிநொச்சி மாவட்டச் செயலராக நியமிக்கப்பட்டார் முரளிதரன்

கிளிநொச்சி, ஓக.7

இலங்கை நிர்வாகசேவை விசேட தரத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் முரளிதரன் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி மாவட்டச் செயலராக நியமிக்கப்பட்டுள்ளார். அமைச்சரவையின் அனுமதியின் பிரகாரம் இந்த நியமனம் வழங்கிவைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே கிளிநொச்சி மாவட்டத்தின் பதில் செயலராகக் கடமையாற்றி வந்த அவர் நிரந்தர மாவட்டச் செயலருக்கான நியமனக் கடிதத்தை கொழும்பில் அமைந்துள்ள அமைச்சரவை அலுவலகத்தில் நேற்று முன்தினம் பெற்றுக்கொண்டார். (ச-66)

# 9 கிலோ கஞ்சாவுடன் இணுவிலில் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஓக.7

யாழ்ப்பாணம் சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இணுவில் பகுதியில் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது அவர்களிடமிருந்து [illegible] 794 கிராம் [illegible] மீட்கப்பட்டன. (ச-27)




# சோதினை மேல் சோதினை

**மாமியார் உடைச்சால் மண்குடம், மருமகள் உடைச்சால் பொன்குடமாம். மற்றவை செய்யிற வேலையளில முட்டையில மயிர் பிடுங்கிறவை, தாங்கள் எவ்வளவு பெரிய பிழை விட்டாலும் "மனிசர் எண்டால் பிழை விடத் தானே செய்வினம்" எண்டு சர்வசாதாரணமாகக் கடந்து போடுவினம். சாதாரண ஆக்கள் அப்பிடிச் செய்தால்கூட பரவாயில்லை. எதிர்காலத் தலைமுறைக்கு வழிகாட்டுற ரீச்சர்மாரை நெறிப்படுத்தவேண்டிய பொறுப்பில உள்ளவையே இப்பிடிப் பொறுப்பில்லாமல் நடக்கிறது எந்த விதத்தில நியாயம்?**

**முதலாம் தவணைச் சோதினைக்கான எக்ஸாம் பேப்பரை அந்தந்தப் பள்ளிக்கூட ரீச்சர்மார்தான் 'செற்' பண்ணிறவை. அப்பிடி அவை செற் பண்ணின எக்ஸாம் பேப்பரை வாங்கிப் பார்த்திட்டு "இதென்ன பாஸ்பேப்பரில இருந்து கேள்வி போட்டிருக்கிறியள்?" "இப்பிடி ஈஸியா ஏன் கேள்வியை எடுத்தனியள்?" "உங்கட சுகத்துக்காக வேற எக்ஸாம் பேப்பரில இருந்து கேள்வியளைக் கொப்பி பண்ணுறீங்களோ? எண்டு கேளாக் கேள்வி கேட்டிருக்கினம் அந்தந்தப் பாடங்களுக்குப் பொறுப்பான ஐ.எஸ்.ஏ.மார். எப்பவும் கேள்வி கேக்கிறதும், குற்றம் குறை பிடிக்கிறதும் ஈஸிதான். ஆனால் இப்பிடி அடுத்தவையைக் கேள்வி கேக்கிறவை தாங்களும் அதுக்கேத்தமாதிரியெல்லோ நடக்கோணும். ஆனால் அப்பிடி அவை நடக்கேலை எண்டதுதான் இப்ப பிரச்சினையா வந்து நிக்குது.**

**வலிகாமம் வலயத்தில இந்தமுறை ரண்டாம் தவணைச் சோதினை நடந்தது. இந்தச் சோதினைக்குப் பேப்பர் செற் பண்ணினது வலயக்காரர். அந்தந்தப் பாடங்களுக்குப் பொறுப்பான ஐ.எஸ்.ஏ.மார்தான் இந்தச் சோதினைப் பேப்பர் செற் பண்ணினவை. எக்கச்சக்கம் குளறுபடியளாம். எட்டாம் வகுப்புப் பிள்ளையளுக்கு 'செயன்முறைத் தொழினுட்பம்' எண்ட பாடத்துக்கு வந்த சோதினைப் பேப்பர் போனவருசம் ரண்டாம் தவணைக்கு வந்த அதே பேப்பர்தானாம். ஒரு சொல்லுக்கூட மாத்தாமல் அப்பிடியே இந்தமுறையும் எக்ஸாம் பேப்பரா அதைக் குடுத்திருக்கினம். 2024 ஆம் ஆண்டு எண்டு இருந்ததைக் கூட மாத்தாமல் அனுப்பிற அளவுக்கு அலட்சியமா நடந்திருக்கினம். அதைவிட ஒவ்வொரு எக்ஸாம் பேப்பரும் பிள்ளையளுக்கு குடுபட்டு, அவையள் விடை எழுதத் தொடங்கின பிறகு "அந்தக் கேள்வியில இப்பிடி ஒரு திருத்தம், இந்தக் கேள்வியில அப்பிடி கரெக்சன்" எண்டு வலயத்தில இருந்து வட்ஸப்பில திருத்தத்துக்கு மேல திருத்தமா சொல்லிக்கொண்டிருந்திருக்கினம். அதிலையும் முந்தநாள் பத்தாம் வகுப்புப் பிள்ளையளுக்கு நடந்த கணிதபாடச் சோதினைப் பேப்பரை 10 மணிக்குப் பிள்ளையளுக்கு குடுத்திட்டினம். ஆனால் அதில அந்தக் கரெக்சன், இந்தக் கரெக்சன் எண்டு வலயக்காரர் 12.59 மட்டும் மாத்திக்கொண்டே இருந்திருக்கினம். இப்பிடி 3 மணித்தியாலப் பேப்பரில எக்ஸாம் தொடங்கி முடியும் வரை கரெக்சன் சொல்லிக்கொண்டிருந்தால் எப்பிடிப் பிள்ளையள் எக்ஸாமை நிம்மதியா எழுதிறது? ரீச்சர்மாருக்கு வகுப்பெடுக்கிற இந்த ஐ.எஸ்.ஏ.மார், ஒரு எக்ஸாம் பேப்பரையே ஒழுங்கா 'செற்' பண்ணத் தெரியாமல் இருக்கினம் எண்டது எவ்வளவு பெரிய அவமானம். இவையள் இப்பிடி இருந்தால் வடக்கு மாகாணம் கல்வியில எட்டாம் இடத்துக்குப் போகாமல் என்னதான் செய்யும்? இந்தமுறை பள்ளிக்கூட எக்ஸாம் பேப்பர் செற் பண்றதுக்கும், திருத்திறதுக்கும் மேலதிகக் கொடுப்பனவு ஒண்டும் இல்லையெண்டு அறிவிச்சதாலதான் இப்பிடி "ஏனோ தானோ" எண்டு சோதினைப் பேப்பர்களை செற் பண்ணினவை எண்டும் ஒரு கதை அடிபடுகுது கண்டியளோ.**

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னை முக்கோண வலயம் மன்னாரில் கலந்துரையாடல்!

மன்னார், ஓக. 7

வடக்கு தென்னை முக்கோண வலய அபிவிருத்தி தொடர்பான விசேட கலந்துரையாடல் பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த வித்தியாரத்ன தலைமையில் மன்னார் மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் கடந்த



வியாழக்கிழமை இடம்பெற்றது. இதன்போது மன்னார் மாவட்ட தெங்கு உற்பத்தியாளர்களுக்கான உரமானியம், உதவித்தொகை, பயனாளிகளுக்கான புதிய தென்னங்கன்றுகள் என்பன வழங்கிவைக்கப்பட்டதுடன் பனை அபிவிருத்தி சம்பந்தமான நடவடிக்கை மேற்கொள்ளவும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. கூட்டத்தில் பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப், பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர் செல்லத்தம்பி திலகநாதன், மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன், மேலதிக செயலர்கள், பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், உப தவிசாளர்கள், அமைச்சின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-25, 56-60)



# யாழ். இந்துக் கல்லூரியினர் வடக்கு ஆளுநருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஓக.7

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும் யாழ். இந்துக் கல்லூரி அதிபர் ரட்ணம் செந்தில்மாறன் தலைமையிலான குழுவினருக்கும் இடையிலான கலந்துரையாடல் யாழ்.சுண்டுக்குளியில் அமைந்துள்ள ஆளுநர் செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

பாடசாலையை வளர்ச்சிப்பாதையை நோக்கிக் கொண்டுசெல்வதற்காக எடுக்கப்பட்டுவரும் செயற்பாடுகள் தொடர்பிலும் கல்லூரியின் வளங்களை மாகாணப் பாடசாலைகளுடன் பகிர்ந்து எவ்வாறு செயற்படுவது? என்பது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. (ச-25,66)


## மரண அறிவித்தல்

மலர்வு 22 . 06 . 1953



உதிர்வு 30 . 07 . 2025

### திருநாவுக்கரசு பரிமளம்

யாழ். வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு பரிமளம் அவர்கள் கடந்த (30-07-2025) புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற சின்னத்துரை, அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லத்துரை, அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு (வில்லுத்தகடு) அவர்களின் அன்பு மனைவியும், ராஜலட்சுமி, விஜயலட்சுமி (சுவிஸ்), செல்வலட்சுமி, ஜதீபன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சண்முகலிங்கம் (சுவிஸ்), விக்கினேஸ்வரன் (Fire Service-Municipal Council of Jaffna), திசா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், நவரட்ணம் (கனடா), குலநாயகி (ராசாத்தியம்மா), குமாரசாமி (கனடா), காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, குணரட்ணம் (ஜேர்மனி), மற்றும் பாக்கியலட்சுமி (ஜேர்மனி), ஜெயரட்ணம் (கனடா), தயாநிதி (பிரான்ஸ்), ரேவதி (தோ-கனடா), நிர்மலா (கீதா-கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான இரத்தினம், சோமசுந்தரம், பூமணி, யோகம்மா, வனிதமலர் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சகிலேஷ், சானுஜா, அஸ்விதா, அன்ஷிகா ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08-08-2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 258 0830
077 171 0782

No.1010/32 Thalaiyali Lane,
Nachchimaar Kovilady.
K.K.S Road, Jaffna.

## மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 03 . 1936



மறைவு 04 . 08 . 2025

### சண்முகநாதன் இராசலட்சுமி

பழைய வீதி, கோப்பாய் தெற்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகநாதன் இராசலட்சுமி அவர்கள் கடந்த (04.08.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கலஞ்சென்றவர்களான விசுவநாதர் - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சுப்பையா சண்முகநாதன் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சுப்பையா - கனகம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான பொன்னையா, பொன்னம்மா இராசத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காந்தவதனி (கனடா), பகீரதி, சிவரஞ்சன், காலஞ்சென்ற குகரஞ்சன் மற்றும் கிருபாரஞ்சன் (கனடா), கிருஞ்ணபவானி ஆகியோரின் அன்புத் தாயும், வீரசிங்கம் (கனடா), ஸ்ரீதரன், ரஜனி (கனடா) ஆகியோரின் மாமியாரும், அனுஷியந்தன் (கனடா), லக்சீன், டக்ஷனா (கனடா) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.08.2025) வெள்ளிக்கிழமை காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழைய வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய். (CS/59039) J-1

தகவல்:
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# நீதியின் தொடக்கப்புள்ளி!

செம்மணிப் புதைகுழி விடயத்தில் சர்வதேசத் தலையீட்டை அனுமதிக்கப்போவதில்லை என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கின்றது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம். செம்மணிப் புதைகுழியை அகழும் பணிகளுக்கு முழுமையான ஆதரவு வழங்குவதாலும், நீதிமன்றங்களின் சுயாதீனத்தன்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாலும் இந்த விடயத்தில் தொழில்நுட்ப உதவிகளைத்தவிர வேறு எதற்கும் சர்வதேசத்தின் தலையீட்டைக் கோருவது அவசியமற்றது என்பதே அரசாங்கத்தின் கருத்தாகவும் நிலைப்பாடாகவும் அமைந்திருக்கின்றது. செம்மணிப் புதைகுழியில் அகழ்வுப் பணிகளை அனுமதித்தமையும், அதற்குத் தேவையான நிதியை விடுவித்தமையும் நல்ல விடயங்கள் என்பதும், வரவேற்கத்தக்கவை என்பதிலும் மாற்றுக்கருத்துகள் இல்லை. ஆனால், புதைகுழியை அகழ்வதற்கு அனுமதி வழங்கியமையும், அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டமையும் ஒரு அராசாங்கத்தின் சராசரிக் கடமைகளே தவிர, அவை ஒன்றும் செயற்கரிய மகோன்னத காரியங்கள் அல்ல. தமிழர்கள் எதிர்பார்த்த நீதியின் இறுதிப்புள்ளியும் அதுவல்ல. இந்தப் புரிதலை தேசிய மக்கள் சக்தியினர் தமக்குள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியைத் தலையாகவும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை உடலாகவும் கொண்ட முன்னாள் ஜனாதிபதி ரணிலின் காலத்திலும் புதைகுழிகள் அகழப்பட்டனதான். அதற்கு முன்னரும்கூட இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றனதான். ஆனால், அதன் அடுத்தகட்டம் என்ன ஆகிற்று என்பது தான் இங்கு கேள்வி. முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழிக்குள் இருந்தும் ஏராளமான என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டன. பெருவெடிப்பாலும், சூட்டுக் காயங்களாலும் அவர்கள் இறந்திருக்கலாம் என்று நீதிமன்றத்தில் அறிக்கையும் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கின் அடுத்தகட்ட விசாரணைகள் அல்லது பொறுப்புக்கூறலுக்கான படிமுறைகள் முழு வீச்சில் உள்ளன என்ற உத்தரவாதத்தை தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் வழங்கமுடியுமா?

ஓர் இடத்தில் மனித என்புத்தொகுதிகள் அவதானிக்கப்பட்டால் அதுவொரு குற்றப்பகுதி. அல்லது குற்றம் நிகழ்ந்திருப்பதற்குச் சாத்தியமுள்ள பகுதி. ஆதலால், அது அகழப்படுவது கட்டாயமானது. அதுவே சர்வதேச நியதியுமாகும். அந்த நியதியைக் கடைப்பிடித்து ஒழுகுவது அனைத்து நாடுகளுக்குமான தார்மீகக் கடமை. இலங்கை பல்வேறு விடயங்களில் விலக்காக இருப்பதால், அநுர அரசாங்கத்துக்கு புதைகுழியை அகழ்வதே பெரிய விடயமாகப்படலாம். அதற்காக அதுதான் நீதி, அதுதான் தமிழர்களின் எதிர்பார்ப்பு என்று பொருளல்ல. அகழ்வுப்பணிகளின் பின்னர் நீதி எந்தளவுதூரம் நிலைநாட்டப்படுகின்றது என்பதே இங்கு பிரதானம்.இதுவரை அத்தகைய நீதி கிட்டாத படியால்தான், சர்வதேசத்தின் தலையீடு உறுதிப்படுத்தப்படவேண்டும் என்று தமிழர்கள் தரப்பு தொடர்ச்சியாக வலியுறுத்திவருகின்றது. கொக்குத்தொடுவாயிலும் இதர பகுதிகளிலும் அவதானிக்கப்பட்ட புதைகுழிகளுக்கான பொறுப்புக்கூறலை அநுர தரப்பினர் நிறைவேற்றியிருந்தால் செம்மணிப் புதைகுழி விடயத்தில் சர்வதேச அவதானிப்பைக் கோரவேண்டிய அவசியமே வந்திருக்காது என்பதுதான் உண்மை. ஆக, அகழ்வுப்பணிகள் நீதிக்கான நெடும் பயணத்தின் இறுதிப்புள்ளியல்ல. இன்னும் சொல்லப் போனால், அதுதான் தொடக்கப் புள்ளி.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



**நாளொரு நல்வார்த்தை**

அனைவருக்கும் நண்பராக இருப்பது என்பது
உண்மையில் ஒருவருக்கும் நண்பராக
இல்லாததைப் போன்றது.

– அரிஸ்டாட்டில்–




# இடமாற்றச்சிக்கலுக்கு தீர்வு கிட்டாவிட்டால் போராட்டம்

*அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை*



**கொழும்பு, ஓக.7**

**மருத்துவர்களின் இடமாற்றப் பட்டியல் தொடர்பான பிரச்சினைகள் எதிர்வரும் 11ஆம் திகதிக்கு முன்னர் தீர்க்கப்படாவிட்டால் நாடளாவிய ரீதியில் பணிப்புறக் கணிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.**

இதுதொடர்பில் அந்தச் சங்கத்தின் உதவிச் செயலாளர் ஹன்சலால் விஜேசூரிய தெரிவித்துள்ளதாவது அமைச்சுடன் பலமுறை பேச்சுக்கள் நடத்தியும் இடமாற்றப்பட்டியலில் உள்ள குறைபாடுகள் தொடர்பாகத் திருப்திகரமான தீர்வுகள் எட்டப்படவில்லை.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் முன்வைத்த கோரிக்கைகளை அதிகாரிகள் அலட்சியம் செய்கின்றனர் - என்றார். (எ-இ)

## கால்வாயில் தவறிவீழ்ந்த சிறுவன் சாவு

கொழும்பு, ஓக.7

பொலநறுவை, வெலிகந்த நாகஸ்தென்ன பகுதியில் கால்வாயில் தவறிவிழுந்து 8 வயதுச் சிறுவன் உயிரிழந்துள்ளான்.

நேற்றுமுன்தினம் மாலை குறித்த சிறுவன் ஆடுகளை மேய்க்கச் சென்றபோதே வெலிகந்தப் பகுதியிலுள்ள கால்வாயில் தவறிவிழுந்தாரெனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)



## சஷீந்திர ராஜபக்ச கைது

கொழும்பு, ஓக.7

முன்னாள் விவசாய இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ச, இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழுவின் அதிகாரிகளால் நேற்றுக் காலை கைதுசெய்யப்பட்டுள்ளார்.


கடந்த அரசாங்கத்தின்போது சீன நிறுவனத்திடமிருந்து தரமற்ற கரிம உரத்தை இறக்குமதி செய்து அரசாங்கத்துக்கு நிதி இழப்புகளை ஏற்படுத்திய குற்றச்சாட்டிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

## கடனைக் கேட்டவர் வெட்டிக்கொலை

கொழும்பு, ஓக.7

கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டதில் இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

கடனாக வழங்கப்பட்ட எழுபத்தைந்தாயிரம் ரூபாயை வசூலிக்கச் சென்றபோது இந்தக் கொலை இடம்பெற்றுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது. (ச-இ)



## கையூட்டுப் பெற்ற பொலிஸ் கைது

கொழும்பு, ஓக.7

கீர்த்திபண்டாரபுரப் பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் பொலிஸ் அலுவலர் ஒருவர், 10 ஆயிரம் ரூபா இலஞ்சம்கோரிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.


வர்த்தகர் ஒருவரால் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் அவர் இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை வலப்பனை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்திய போது எதிர்வரும் 18ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சக்தி



# வேலணை பெருங்குளம் அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலய
# சப்பைரத வெள்ளிவிழா சிறப்பு மலர்
## (07.08.2025 - வியாழக்கிழமை)

### மகோற்சவ பிரதம குரு "ஆகம கிரியா சிரோன்மணி" சிவஸ்ரீ உ.திலகேஸ்வரக் குருக்கள் ஆசியுரை

இலங்காபுரியின் வடபால் சிவபூமி என போற்றப்படும் யாழ்ப்பாணம் தென் புறத்தே சப்த தீவுகளின் நடு நாயகமாக விளங்கும் வரலாற்றுச் சிறப்பு மிக்க வேலணை பெருங்குளம் அருள் மிகு ஸ்ரீமுத்துமாரி அம்மனின் விசுவாசு வருடம் (2025) மஹோற்சவத்தின் 9ம் நாள் (07.08.2025) சப்ரத்திருவிழா ஸ்ரீ முத்துமாரி அம்மனின் பெரும் திருவருள் துணைநிற்க சப்பரதம் 25 ஆண்டு (வெள்ளிவிழா) நிறைவை காணுகின்ற இந் நன்நாளில் முத்துமாரி அம்மனின் அடியார்கள் யாவருக்கும் அம்பிகையின் பெரும் திருவருளைப் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வாங்கு வாழ்வீர்களாக!

கோபுர தரிசனம் கோடி புண்ணியம் லோக சமஸ்த சுக்கினோ பவந்து

### தலைவரின் வாழ்த்துச் செய்தி



வேலணை பெருங்குளம் ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோவில் சப்பரவெள்ளி விழா ஆண்டை முன்னிட்டு பரிபாலன சபையின் தலைவர் என்ற வகையில் எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் மனமகிழ்ச்சி அடைகின்றேன். 2000ம் ஆண்டு சப்பர சில்லு செய்வதற்கு வேலணை வட கிழக்கில் அமைந்துள்ள முருகமூர்த்தி கோவிலின் அருகே அமைந்துள்ள மருத மரம் இனங்காணப்பட்டது. அன்றைய காலத்தில் முருகமூர்த்தி கோவிலின் மேற்பார்வையாளராக இருந்த சு.கந்தசாமி என்பவரின் அனுமதியுடன் பாரிய மருதமரம் அம்மணிச்சப்பரத்திற்கு வழங்கப்பட்டது. அக் காலகட்டத்தில் காட்டுமரங்கள் எடுத்து வருவது மிகவும் சிரமமான நடைமுறையாகும். இக் காலகட்டத்தில் சிறப்பாகச் செயற்பட்ட மேற்கூறிய நபர்களுக்கு நன்றியைத் தெரிவிப்பதோடு 2001ம் ஆண்டு அம்மன் சப்பரத்தில் எழுந்தருளிய காட்சியை அடியவர்களுடன் இணைந்து கண்டு களித்தவர்களில் நானும் ஒருவன் என்பதை மிகவும் மகிழ்வுடன் நினைவுகூருகின்றேன். சப்பர வெள்ளிவிழா சிறப்புற நிகழ்வதற்கு எனது வாழ்த்துக்களை சிறப்புற விழைகின்றேன்.

**சுப்பையா சுந்தரலிங்கம், தலைவர் பரிபாலன சபை**
**வேலணை பெரும்குளம் முத்துமாரி அம்மன் கோவில்**

### 25 ஆண்டுகள் தாண்டி தொடரும் பாரம்பரியம்



மூர்த்தி தலம் தீர்த்தம் மூன்றும் ஒருங்கே அமையப்பெற்ற வேலணை பெருங்குளம் முத்துமாரியம்மன் கோயில் கொண்டு எழுந்தருளி எமக்கு அருள் பாலித்து கொண்டு இருக்கும் அம்பிகைக்கு எமது மூதாதையரினால் அமைக்கப்பட்ட சிறப்புமிக்க சப்பறமானது கால ஓட்டத்தில் எழில் குன்றி தொடர்ந்து பாவிக்க முடியாத நிலை ஏற்பட்டதனால் 1986 ஆம் ஆண்டு அளவில் சப்பறம் அமைப்பதற்காக முடிவுகள் மேற்கொள்ளப்பட்டு முன்னாய்த்த நடவடிக்கைகளில் ஈடுபட்ட போதும் சில தவிர்க்க முடியாத காரணங்களால் நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது. அத்துடன் 1991ஆம் ஆண்டு பாரிய இடம் பெயர்வின் பின் ஆலயமானது பூசைகள் அற்று பூட்டப்பட்டு காணப்பட்ட நிலையில் மீண்டும் 1996 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் பூஜை வழிபாட்டிற்காக மகா கும்பாபிஷேகத்துடன் திறக்கப்பட்டதை நாம் அனைவரும் அறிவோம். 1999 ஆம் ஆண்டு நான் பரிபாலனசபைத் தலைவராக இருந்த பொதுக்கூட்டத்தில் மீண்டும் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி திரு சசிகரன். அவர்களும் திரு கனகசபாபதி அவர்களும் அன்றைய முகாமை யாளர் திரு ஐ சிவராசா. மற்றும் நானும் அம்பாளுக்கு சப்பரம் அமைக்கும் திருப்பணியை ஆரம்பித்தோம். அதன் முதற்படியாக ஞானபைரவர் ஆலயத்தில் இருந்த மருத மரத்தை அவ் ஆலயத்தின் நிர்வாகத்தின் பூரண சம்மதத்துடன் அம்பிகையின் சப்பறத்துக்கு காணிக்கையாக்கி திருப் பணியை தொடர்ந்தோம். அக்கடின காலகட்டத்திலும் அன்னை மீதான உன்னத பக்தியினால் முன் நின்று உழைத்த அனைவரையும் மனதார வாழ்த்தி பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**க. சரவணநாதன்**
**முன்னாள் பரிபாலன சபை தலைவர்**

### ஆலய முகாமையாளரின் வாழ்த்துச் செய்தி



சிவபூமி என்று திருமூலரால் போற்றப்பட்ட ஈழமணித் திருநாட்டின் வடபால் யாழ் மாநகரின் கண்ணே சைவமும் தமிழும் தழைத்தோங்கும் சப்த தீவுகளின் நுழை வாயிலாகவும் முருகப்பெருமானின் வேல் வந்துஅணைத்ததினால் வேலணை என்று சிறப்பிக்கப்படும் ஊரிலே எம்பெருமாட்டி முத்துமாரி பெருங்கோயில் கொண்டு அருள்பாலிப்பது அற்புதமாகும். எம்பெருமாட்டியின் வரலாற்றை சற்று நோக்குவோமால் ஆவுரசு நொச்சிகளால் சூழப்பெற்ற கற்புலம் எனும் இடத்தில் கட்டை மாதனுக்கு காட்சி கொடுத்து ஆட்கொண்டு பூசாரி வளவிலே புதுக்கோவிலுற்று வழிபாடாற்றப்பட்டது. பின்னர் தீப்பரவல் ஆலயத்தை சேதமாக்கியதால் முடவன் கேணி எனும் இடத்தில் கொட்டகை இடப்பட்டது அம்பாளை வழபட்டு வந்ததாக கர்ணபரம்பரைக்கதைகள் கூறுகின்றன. பின்னர் புங்குடுதீவைச்சேர்ந்த விநாசித்தம்பி எனும் தனவான் தற்போது பெருங்கோவில் அமைந்துள்ள காணியை வாங்கி நன்கொடையாக ஆலயத்திற்கு வழங்கினார். அம்பாளுக்கு ஆலயம் அமைத்து திருவிழாக்களும் நடைபெற்றது. அந்த வகையில் ஏலவே செய்து அம்பாளின் சகோபுரம் பழுதடைந்ததால் புதிய கோபுரம் 2001ம் ஆண்டு ஆகஸ்ட் 1ம் திகதி சப்பைரத உற்சவக்காரர்களால் புதிய சகோபுரம் அமைக்கப்பட்டு வெள்ளோட்டம் கண்டு இவ்வருடம் 25வருடம் ஆகின்றது. அந்த வகையில் அன்றைய சப்பைரத திருப்பணியை உபதலைவர் என்ற வகையிலும் ஆலய முகாமையாளர் என்ற வகையிலும் இப்புனித கைங்கரயத்தில் தங்களை இணைத்துக்கொண்ட அம்பாளின் அடியார்களை நினைவுகொள்வதோடு வருடாவருடம் எம்பெருமாட்டியின் சப்பரத் திருவிழாவை கட்டைமாதன் பரம்பரையினரே செய்தும் வருவது கிடைத்தற்கரிய பேறு. ஆயிரம் கண்கொண்ட அங்கயற்கண்ணியின் ஆனந்த திருவருள் அனைவருக்கும் கிடைக்க அம்பிகையின் பாதக்கமலங்களில் பணிகின்றோம்.

**ஐ.சிவராசா**
**ஆலய முகாமையாளர்**

### பொருளாளரின் வாழ்த்துச்செய்தி



வேலணை பெருங்குளம் அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலய சப்பரத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவு விழா சிறப்புடன் நடைபெற எனது வாழ்த்துக்கள். இச் சப்பரமானது சப்பர திருப்பணி சபையின் அயராத முயற்சியினாலும் அப்போது இருந்த ஆலய பரிபாலன சபையினரின் முழுமையான ஒத்துழைப்புடனும் இன்னும் பல முத்துமாரி அம்பிகையின் அடியார்களின் முழுமுமையான ஒத்துழைப்புடன் மிகக் குறுகிய காலத்தில் இத்திருப்பணி நிறை வடைந்து இருந்தது. இத் திருப்பணியில் தொண்டாட்டிய அனைவருக்கும் நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டு இன்று இந்த 25 ஆவது ஆண்டு நிறைவில் இளையவர்கள் கலந்து கொண்டு இந்த விழாவை கொண்டாடுவதை கண்டு நான் மன நிறைவடைகின்றேன். நன்றி.

**பொருளாளர், சப்பர திருப்பணிச் சபை**

### முன்னாள் தலைவரின் வாழ்த்துச் செய்தி



வரலாற்றுச் சிறப்பு மிக்க வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோவிலில் அழகிய சித்திரத் தேர் இராச கோபுரம் ஏனைய கட்டுமானங்கள் நிறைவேறிய நிலையில் அழகிய சப்பறம் அமைத்து அதில் அம்பிகை எழுந்தருளச் செய்ய வேண்டும் என்ற அடியவர்களின் சிந்தன சப்பறத் திருப்பணிச் சபையால் நிறைவேறியது. சுமார் 25 வருடங்களுக்கு முன்பு சப்பறம் அமைக்கப்பட்டு இன்று பூர்த்தி செய்யும் இந் நிகழ்ச்சிக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் பெரும் மகிழ்வு அடைகின்றேன்.பணம் இருந்தாலும் இதற்கான மரங்கள் தேடுவதில் மிகவும் சிரமப்பட வேண்டி இருந்தது. இதற்கும் அம்பிகை தனது ஊரிலே பொருத்தமான மரங்கள் கொடுத்து அருளினாள். இதற்கான பெரு முயற்சியில் முற்று முழுதாக ஈடுபட்ட திரு. சு.கனகசபாபதி பாஸ்கரன், சசிகரன், சிவராசா ஆகியோருக்கும் ஏனைய உறுப்பினர்களுக்கும் அம்பிகை அருள் கிடைக்கட்டும். யாழ்ப்பாணத்தில் சிறப்பான சப்பறங்களில் முக்கிய இடத்தை இது தக்கவைத்தள்ளது. எல்லாம் அவளின் திருவருள். நன்றி.

**ந. ஜெகநாதன்**
**முன்னாள் தலைவர் பரிபாலன சபை**

### செயலாளரின் ஆசிச் செய்தி



பன்னெடுங்கால வரலாற்றுப் பெருமையும் புதுமையும் நிறைந்த அருள்மிகு வேலணை பெருங்குளம் சிறீ முத்துமாரி அம்மன் ஆலயச் சரித்திரத்தில் இன்றைய நாள் அதி சிறப்புக்குரிய நாளாக விளங்குகிறது என்றால் மிகையில்லை. ஒப்புவமை இல்லாப் பெரும் சோதியாய் ஓம் சக்தியாய் இப்புவி ஆளும் தேவியாய ராணியாய் வேண்டுவார்க்கு வேண்டுவனவற்றை வாரி வழங்கும் கொடை வள்ளியாய் எமதூரில் வீற்றிருந்து அருள் பாலிக்கும் அன்னைக்கென அளப்பெரிய சப்பை ரதம் உருவாக்கித் தாயை அதில் ஏற்றி அழகுபார்த்த மகோன்னத நாள் இன்றைய நாளாகும். இற்றைக்கு கால் நூற்றாண்டுக்கு முன்னதாக நிகழ்ந்த இப் புண்ணிய கருமத்தில் அடியேனும் சேர்ந்து தொண்டாற்றியிருக்கிறேன் என்பதை நினைத்துப் பூரிப்படைகின்றேன். பொருளாதார மூலவள வசதிகள் மிகமிக அரிதான அன்றைய காலத்தில் நம்பிக்கையை மட்டும் மூலதனமாக நம்பி அம்பாளின் பேரருளாலும் அடியார்களின் பெரும் பங்களிப்பினாலும் இந்தக் கைங்கரியம் கைகூடியிருக்கிறது என்றால் அது தாயின் புதுமையன்றி வேறொன்றுமில்லை.இன்று அன்னை அழகிய சப்பைரதத்தில் பவனிவரும் கண்கொள்ளாக் காட்சியைக் காணும் போதெல்லாம் அன்று இதற்காக நாம் பட்ட கஸ்டங்கள் கண்முன்னே வந்து போகின்றன இத் தருணத்தில் இந் நல் நோக்கத்திற்காக வாரி வழங்கி அழகிய சப்பைரதம் அமையப் பெற உழைத்த உதவி ஒத்தாசை வழங்கிய அத்தனை உள்ளங்களையும் நன்றியுணர்வுடன் நினைவில் கொள்கின்றேன்.அற்புத தேவியின் சப்பைரத விழா சிறக்கவும் அடியவர்களுக்கு எல்லாம் வல்ல எமதன்னையின் பேரருள் கிடைக்கவும் வேண்டி வாழ்த்திப் பணிகின்றேன்.

**சு.சசிகரன்,**
**செயலாளர் சப்பைரத திருப்பணி சபை**

### முன்னாள் பொருளாளரின் வாழ்த்து செய்தி

அன்னை பெருங்குளத்தாளின் அழகிய சப்பை தேருக்கு (சப்பரம்). இன்று வெள்ளி விழா இது சம்பந் தமாக வெளிவரும் மலருக்கு எனது வாழ்த்து செய்தியை தருவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். 25 வருடங்களுக்கு முன் நல்லூர் இரண்டாவது குரு மகா சன்னிதானம் அவர்களின் ஆசிகளுடன் வெள்ளோட்டம் கண்ட சப்பரம் வானுயர உயர்ந்து நிற்கும் அன்னையின் இராச கோபுரத்துக்கு அடுத்து. வருடம் தோறும் புது மெருகு பெற்று அன்னையையும் புதல்வர்களையும் தாங்கி வீதியுலா வந்து அடியவர்களுக்கு அருளாசி தர நிமிர்ந்து நிற்கிறது. முன்னய நாட்களில் சப்பரத் திருவிழா உபய காரர்களின் உடல் உழைப்பின் பலனாக குடா நாட்டின் அதிஉயர் சப்பரமாக நிமிர்ந்து நின்று கோவில் சுற்றாடலுக்கு அழகு சேர்த்தமையை சிறுவயதில் நாம் கண்டு ஆச்சரியப்பட்டு இருக்கிறோம். இதில் மாற்றம் ஏற்பட்டாலும் காலப்போக்கில் பின் வந்த இளைஞர்களின் உறுதியும் உழைப்பும் இன்றும் காண்போர் கண்ணைக் கவரும் சப்பரமாக முதலிடத்தில் உயர்ந்து நிறக செய்து உள்ளது. விசேடமாக இவ் சப்பரத்தில் இரு பக்கமும் பொருத்தப்பட்டுள்ள யாழிகள் ஒரு பலகையில் சித்திர வேலைபாடுடன் அமைந்துள்ளமை வேறு எங்கும் காண முடியாதது. முடிவாக இந்த வெள்ளிவிழா சிறப்பாக அமைய அன்னையின் அடிபணிந்து பிரார்த்திப்பதோடு எனக்கு இந்த சந்தர்ப்பத்தை தந்த திருவிழா ஏற்பாட்டாளர்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றி. மூலவர் கட்டை மாதன் தொண்டன் பிள்ளையானுக்கு அருள் புரிந்த அன்லை அனைவரையும் காப்பாற்றுவாளாக. "மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்".

**அன்னை அடியவன்**
**க.நவரத்தினம்**

### கவிப்புலவர் வேலணையூர் சுரேஸ்

தப்பை உணர்ந்திவ் வையம் திருந்த
சப்பை ரதமேறி வாம்மா!
தப்பை உணர்ந்திவ் வையம்
தழைத்திட வேண்டி பலரின்
குப்பை மனங்கள் இழைக்கும்
கொடுமைகள் விலகிட வேண்டி
நட்பை.. அன்பை.. பண்பை
நானிலம் போற்றிட வேண்டி
சப்பை ரதமேறி வாறாள்
செல்வதியாம் வேலணைத் தாயாள்!

உப்பைப் போன்றே கசக்கும்
உறவுகள் இனித்திட வேண்டி
கற்பைப் போன்றே காக்கும்
கண்ணியம் ஓங்கிட வேண்டி..
செப்பத் தகுந்த வாழ்க்கை
செழித்திட வேண்டி இன்று
சப்பை ரதமேறி வாறாள்
செல்வதியாம் பெருங்குளத் தாயாள்!

**கவிப்புலவர் வேலணையூர் சுரேஸ்**

## வாழ்த்துவோர்: சப்பர உபயகாரர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இணுவில் திருப்பதி
அருள்மிகு
ஸ்ரீ வேங்கடேஸ்வர
ஆலயம்

வரலக்ஷ்மி விரதம்
08.08.2025
வெள்ளிக்கிழமை

அதிகாலை 5.00 மணிக்கு
மகாலட்சுமி தாயார் அபிஷேகம்

காலை 7.30 மணிக்கு
விசேட பூஜை, தாயார் தரிசனம்

மாலை 4.30 மணிக்கு
வரலக்ஷ்மி விரத கலச பூஜை

இரவு 7.00 மணிக்கு
மகாலட்சுமி தாயார் திருவீதியுலா

வரலக்ஷ்மி விரத கலச பூஜை
செய்ய விரும்புபவர்கள்
021 224 2300 தொடர்பு கொள்ளவும்

ஆலய தர்மகர்த்தா
சண்முகராசா கணேசலிங்கம்

(CS 3788) A

# முக்கிய அறிவித்தல்

**Ceylon Green Life Plantation (Pvt) Ltd**
நிறுவத்துடன் வணிக உறவுகளில் ஈடுப்பட்ட அனைத்து நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களின் கவனத்திற்கு



## திரு.செல்லத்தம்பி ஜெசிகரன்

தேசிய அடையாள அட்டை இல.781452360V
முகவரி: பவுன்டரி வீதி, பெரியக்கல்லாறு 01

மேற்கண்ட நபர் எமது நிறுவனத்தில் வலய முகாமையாளர் (Zonal Manager) பதவியில் பணியாற்றியவர். 2025 ஜுலை 07ம் திகதி முதல் எமது நிறுவனத்தில் பணியில் இல்லை என்பதை இத்தால் அறியத்தருகிறோம்.

எனவே மேற்குறிப்பிட்ட திகதிக்கு பின்னர் மேற்படி நபர் எமது நிறுவனத்தின் பெயரில் மேற்கொள்ளும் எந்தவொரு உடன்படிக்கையையோ அல்லது பரிவர்த்தனையையோ தொடர்பாகவும் Ceylon Green Plantation (Pvt) Ltd நிறுவனம் பொறுப்பேற்காது என்பதை கவனத்தில் கொள்ளவும்.

Ceylon Green Plantation (Pvt) Ltd
Seeduwa.





# உயிரியல் ஆசான் குணசீலனுக்கு வழங்கப்பட்டது யாழ். விருது

யாழ்ப்பாணம், ஓக.7

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி பெருந் திருவிழாவை முன்னிட்டு யாழ்.மாநகரசபையின் சைவசமய விவகாரக் குழுவின் ஏற்பாட்டில் நல்லைக் குமரன் மலரின் 33 ஆவது இதழ் வெளியீட்டு விழா வும், யாழ் .விருது வழங்கும் நிகழ்வும் நேற்றுப் புதன் கிழமை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் யாழ்.மாநகரசபையின் ஆணையாளர் ந.கிருஷ்ணேந்திரன் தலைமையில் சிறப்பாக இடம் பெற்றது.

நிகழ்வில் யாழ்.மாநகரசபையின் முதல்வர் திருமதி வி.மதிவதனி பிரதம விருந்தினராகவும், யாழ்.மாவட்ட மேலதிக செயலர் கை.சிவகரன் சிறப்பு விருந்தினராக வும் கலந்துகொண்டனர்.

பருத்தித்துறைப் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தி யோகத்தர் கோ.கோகுலறதன் நல்லைக்குமரன் மலர் வெளியீட்டுரையை ஆற்றினார். அதனைத் தொடர்ந்து நல்லைக்குமரன் மலரை யாழ்.மாநகரசபையின் முதல்வர் வெளியிட்டு வைக்க தெல்லிப்பழை ஸ்ரீ துர்க் காதேவி ஆலயத்தின் சார்பில் இ.இராதாகிருஷ்ணன் முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சட்டத்துறைத் தலை வர் திருமதி. கோசலை மதன் மலரின் ஆய்வுரையை நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து 2025 ஆம் ஆண்டுக்கான யாழ் விருது தனக்கென வாழாது மாணவர் உலகிற்கா கத் தன்னை அர்ப்பணித்து வாழும் கோப்பாய் ஆசிரி யர் கலாசாலையின் ஓய்வுநிலை விரிவுரையாளரும், உயிரியல் ஆசானுமான சின்னத்தம்பி குணசீலனுக்கு வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. (ச-66.20)

# கசிப்புடன் மூவர் தருமபுரத்தில் கைது

கிளிநொச்சி, ஓக.7`

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட் பட்ட புளியம்பொக்கணைப் பகுதியில் சூட்சும மான முறையில் பயணப் பொதியில் மறைத்து பேருந்தில் கசிப்பை எடுத்துச்செல்ல முற்பட்ட சந்தேகநபர்கள் இருவர் தருமபுரம் பொலிஸா ரால் கடந்த திங்கட்கிழமை கைதுசெய்யப்பட்டுள் ளனர். சந்தேகநபர்களிடமிருந்து 30 லீற்றர் கசிப்பு பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. அதே வேளை நேற்றுத் தருமபுரப் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைவாக பெரியகு ளம் கட்டைக்காட்டுப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் கசிப்புக் காய்ச்சுவதில் ஈடுபட்ட சந் தேகநபர் ஒருவர் 50 லீற்றர் கசிப்பு 60 லீற்றர் கோடா மற்றும் கசிப்புக் காய்ச்சுவதற்குப் பயன் படுத்தப்படும் உபகரணங்கள் என்பனவற்றுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் மூவரும் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட் டுள்ளனர் எனத் தருமபுரப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம். திசாநாயக தெரிவித்துள் ளார். (ச-113-27)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மண்ணிற்கு
26 . 06 . 1933

விண்ணிற்கு
04 . 08 . 2025

எங்கள் ஸ்தாபனத்தின் நீண்ட கால உறுப்பினர்
முகாமையாளர் (Manager) கிருஷ்னதாசன் (ஐயா)
அவர்களின் மாமியார்

## அமரர் திலகவதி கந்தசாமி

அன்னாரின் பிரிவுச்செய்தி கேட்டு மிகவும் துயரடைவதோடு அவரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறையருள் வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

உரிமையாளரும்
ஊழியர்களும்
வாணி ரெக்ஸ்
இல. 81, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

மணிவர்ணன் குடும்பத்தினர்
கல்வியங்காடு வடக்கு
நல்லூர்.

(CR/45734) J-1

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
25 . 06 . 1936

மறைவு
04 . 08 . 2025

## வினாயகர் மகாலிங்கம்

எமது நிறுவனத்தின் பணியாளர்
**மகாலிங்கம் மதிவதனன்**
அவர்களின் தந்தை காலமான செய்தி அறிந்து மிகுந்த வேதனை அடைகின்றோம். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உதயன்
குழுமத் தலைவரும்,
பணியாளர்களும்.

# கண்ணீர் அஞ்சலி



## திரு. திருநாவுக்கரசு சுந்தரலிங்கம்

(முன்னை நாள் தலைவர் யாழ் மாவட்டக் கூட்டுறவுச்சபை, ஊர்காவற்றுறை பல நோக்கு கூட்டுறவுச்சங்கம், முன்னை நாள் பணிப்பாளர் வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி, யா.மா.கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசம், யா. மா.விவசாய நுகர்ச்சி கூட்டுறவு சாங்கங்களின் சமாசம்)

தீவகத்தின் கூட்டுறவுக்கனி
இன்று விதையாகிப் போனதோ!
ஆளுமை மிக்க கூட்டுறவுத்
தலைமைத்துவத்தினை கொண்ட பண்பாளர்
அன்னாரின் பிரிவினால்
கூட்டுறவுச்சமூகம் துயருறுகின்றது.
மறைவினால் துயருற்றிருக்கும்
அன்னாரது குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவித்துக் கொள்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்
யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபை
இல. 12, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்

தோற்றம்
21.02.1956

மறைவு
05.08.2025

(CR/45736) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாயமான மீனவர்கள் பாதுகாப்பாக மீட்பு

யாழ்ப்பாணம், சேந்தாங்குளத்தில் இருந்து கடற்றொழிலுக்குச் சென்ற இருவர் காணாமற் போயிருந்தநிலையில் அவர்கள் நேற்றுப் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் படகொன்றில் கடற்றொழிலுக்குச் சென்ற இவர்கள் காணாமற்போயிருந்தனர். அவர்களைத் தேடும் நடவடிக்கையில் மீனவர்களும், கடற்படையினரும் ஈடுபட்டிருந்த நிலையில், படகு பழுதடைந்து கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த போது அவர்கள் மீனவர்களால் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர். (எ-27)

**தேவை**
கணக்கியலிலும், கணனியிலும் ஆர்வமுள்ளவர்கள் தேவை
தொடர்பு: 077 772 2215

**தேவை**
சாவகச்சேரியில் இயங்கும் சிற்றுண்டி நிலையத்தில் பணியாற்றக்கூடிய பெண் பணியாளர்கள் தேவை.
075 130 6392
(CR/45735) I-L

## மரண அறிவித்தல்



### கணேசலிங்கம் இந்திராணி

தோற்றம் 07.04.1950 — மறைவு 04.08.2025

கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கு கேணியடி வசிப்பிடமாகவும் கொண்ட கணேசலிங்கம் இந்திராணி அவர்கள் கடந்த (04.08.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம்-நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இராசையா-நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும் கணேசலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிவகுமார், துரைரத்தினம் மற்றும் இராசமலர், பாஸ்கரன், நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் இந்துமதி (பிரான்ஸ்), ஜனிதா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், விஜிதரன் (பிரான்ஸ்), சயிலன் (லண்டன்) ஆகியோரின் மாமியாரும், விபிஷன், டிக்ஷன், ஆட்விகா, ஆரோக் ஆகியோரின் பேர்த்தியும், கலைமதியின் பெரியதாயாரும் கமலபாஸ்கரன், ராசன் காலஞ்சென்றவர்களான ஞானானந்தன், இரவீந்திரன் மற்றும் கனகம்மா, லீலாவதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.08.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
கணவர்-கணேசலிங்கம் (லிங்கம்)

## பெறுகைகளுக்கான அறிவித்தல்
## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்
### தெரிவு செய்யப்பட்ட வைத்தியசாலைகளுக்கு ,சமைத்த உணவு வழங்குவதற்கான பெறுகை-

2025.09.08 தொடக்கம் 2026.08.31 வரை


தலைவர், பிராந்திய பெறுகைக் குழு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கீழுள்ள தெரிவு செய்யப்பட்ட வைத்தியசாலைகளுக்கு சமைத்த உணவை வழங்குவதற்குத் தகைமையுள்ள தனித்தனியாக விலை மனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலை மனுப்பத்திரங்களினை கோருகின்றார்.

| தொ. இல | பெறுகை இலக்கம் | பெறுகையின் தன்மை | சேவைவழங்கவேண்டியநிலையம் | கேள்வி உத்தரவாத முறி |
|---|---|---|---|---|
| 01. | DH/CM/2025/ 01 தொடக்கம் 17 வரை | சமைத்த உணவு வழங்கல் சேவை | பிரதேச வைத்தியசாலைகள் (யாழ் மாவட்டம்) மொத்தம் 17 வைத்தியசாலைகள் | தலா ரூபா 30,000.00 |

1. பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி தனித்தனியாக மேற்கொள்ளப்படும்.
2. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கும் ஒப்பந்த அறிக்கை பெறுவதற்கும் , வெற்றிகரமான விலைமனுதாரர் கறுப்புப் பட்டியலில் இடம்பெற்றிருக்கலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
   அ. விலை மனுதாரர் வலிதான வியாபாரப் பெயர் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   ஆ. அத்துடன் தொடர்புடைய வழங்கு பொருட்களின் / சேவையினை வழங்குவதற்கான அனுமதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   இ. அத்துடன், வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
3. ஒப்பந்த அளிப்பிற்கு தகைமை பெறுவதற்கு விலைமனுதாரர்கள் பகுதி 2 –பெறுகைத் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலை மனுதாரர்கள் மேலதிக தகவல்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, சுகாதாரக் கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நேரிலும் 0212226253, 0212214966 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாகவும் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் பெறுகை ஆவணங்களை இவ் முகவரியில் வேலை நாட்களில் 09:00 மணி தொடக்கம் 15:00 மணிவரை பரிசீலிக்க முடியும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் 06.08.2025 ஆம் திகதி முதல் 19.08.2025 ஆம் திகதி வரை 09:00 மணி தொடக்கம் 15:00 மணி வரையான காலப் பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் காசாக மீளளிக்கப்படாத வைப்பாகத் தலா ரூபா 3,000.00 ஐ அலுவலக காசாளரிடம் செலுத்தி அப்பற்றுச்சீட்டினை பெறுகைக் கிளையில் சமர்ப்பித்து கேள்விப்பத்திரத்தை / பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம்.
6. பெறுகை ஆவணங்கள் 20.08.2025 அன்று காலை 10.00 மணிக்கு முன்பதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, சுகாதாரக் கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலை மனுக்கள் அனைத்தும் பெறுகை நேரமுடிவில் சமூகமளித்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான பெறுகைகள் நிராகரிக்கப்படும்.
7. பெறுகைக்கு முன்னரான கூட்டமொன்று திணைக்களத் தலைவரின் கீழ் குறிப்பிட்டுள்ள அமைவிடத்தில் 14.08.2025 ஆம் திகதி ஆவணி மாதம் 2025 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு நடைபெறும்.
8. மேற்குறிப்பிட்ட பெறுகைப் பிணைப்பணம் ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக செலுத்தப்படல் வேண்டும். என்பதுடன் இப்பிணைப்பணம் வங்கியில் செலுத்தி அவ் ஆவணத்தினை கேள்வி ஆவணத்துடன் இணைத்தல் வேண்டும்.
9. இவ் விலை மனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்தோ எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ் விலைமனுகோரலை ரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

**வைத்தியகலாநிதி ஆ. கேதீஸ்வரன்,**
**தலைவர், பிராந்திய பெறுகைக் குழு**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்**
**021-222-3725, 021-222-6253, 021-221-4966 தொலைநகல்:**
**021-222-9971 மின்னஞ்சல்:** rdhsjaffna 15@gmail .com

# மரண அறிவித்தல்



மலர்வு 21.02.1956 — உதிர்வு 06.08.2025

## திருநாவுக்கரசு சுந்தரலிங்கம்

(முன்னாள் தலைவர் ஊர்காவற்றுறை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், முன்னாள் தலைவர் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை, யா.மா.நு.கூ சங்கம் மற்றும் யா.மா.கூ.கிராமிய வங்கிகளின் சமாசம் ஆகியவற்றின் நிர்வாக உறுப்பினர்.)

நாரந்தனை வடக்கு ஊர்காவற்றுறையை பிறப்பிடமாகவும், ஓடை லேன், வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு சுந்தரலிங்கம் அவர்கள் நேற்று (06.08.2025) புதன்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் நாரந்தனை வடக்கை சேர்ந்த காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு - இராசம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், வேலணை மேற்கை சேர்ந்த காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் - இந்திராவதி தம்பதியரின் அன்பு மருமகனும், தவராணியின் ஆருயிர் கணவரும், அமிர்தலிங்கம் (கனடா), சொர்ணலிங்கம் (கனடா), காலஞ்சென்றவர்களான இன்பலிங்கம், அமிர்தவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பிரவீனா (இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்), விருசன் (கனடா), கிர்ஷாந்தன் (ஆசிரியர், முத்தையன்கட்டு வலதுகரை மகா வித்தியாலயம்), திலக்ஷி (கனடா) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், சாருமதி (கனடா), அஸ்வினி (யாழ்ப்பாணம்), மகிந்தன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், கிஷோரா, அபினேஷ், பிரனீத் ஆகியோரின் ஆசை அப்பப்பாவும், திக்ஷிகா, பிருதிக்ஷன், சபரீசன் ஆகியோரின் ஆசை அம்மப்பாவும், ஜான்சிராணி, காலஞ்சென்ற டெய்சிராணி மற்றும் முருகதாஸ் (கனடா), புஸ்பராணி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.08.2025) வியாழக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

19/1, ஓடை லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல் : குடும்பத்தினர்
077 731 1131 (மகன்),
075 271 9793 (மகள்).

(CS 59038) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சக்தி



வட்டுக்கோட்டை - துறட்டிப்பனை

# ஸ்ரீமுத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்

## விசுவாசு வருஷம் (2025 ஆம் ஆண்டு)

# மகோற்சவ விஞ்ஞாபனம்


# இரதோற்சவ சிறப்பிதழ்

## (08.08.2025 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணி)

### ஆலயச்சிறப்பு

குமரி மாநிலத்தில் பிரமதண்டம் முள்ளந்தண்டு போல் விளங்கும் மேருமலையின் குறியை காணலாம் என திருமூலர் கூறும் இலங்கை திருநாட்டில் மகுடம் என விளங்கும் வலிகாமம் மேற்கு வட்டுக்கோட்டை கிழக்கு துறட்டிப்பனை எனும் திருப்பதியில் வயலும் வயல் சார்ந்த மருத நிலத்தில் நடுவான் சீதாளதேவி பொன்வண்ணப் பேரழகி முத்துமாரி அம்பாள் வேண்டும் வண்ணம் அருள் பாலிக்கின்றாள். அப்பெரும் தாய்க்கு 08.08.2025 வெள்ளிக்கிழமை காலை 08.00 மணியளவில் இலங்கை வரலாற்றில் முதன் முதலாக வடிவமைக்கப்பட்ட தசகோண பவள பத்திரக கலிங்கமரபு சித்திர தேர் காண திருவருள் கைகூடியுள்ளது.

### பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி



இலங்காபுரியின் வடபுலத்தின் கிரமமாக விளங்கும் யாழ்ப்பாண தீபகற்பத்தின் வலிகாமம் மேற்கு சங்கானை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட வட்டுக்கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் பல்நெடும் காலமாக எழுந்தருளி அருள்பாலித்து வரும்- வட்டுக்கோட்டை- துறட்டிப்பனை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் மஹோற்சவ பெருவிழா கொண்டாடுவதையிட்டு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பிரதேச செயலாளர் என்ற வகையில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். இதில் தேர் திருவிழா என்பது முக்கியமானதொன்றாகும். இவ்வாலயத்தில் புதிதாக நீர்மாணிக்கப்பட்ட இரதோற்சவம் நடைபெறுவதை இட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். எனவே நீண்ட காலமாக முறையான நிர்வாக சபை அமைக்கப்பட்டாமல் இருந்து 2024ல் புதிய நிர்வாக சபை அமைக்கப்பட்டு சிறப்பான முறையில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இந் நிலையில் தற்போது உள்ள நிர்வாகத்தினர் புதிதாக தேர் ஒன்றை அமைத்தது சிறப்பான ஒரு விடயமாகும். இவ் ஆலயத்தின் வளர்ச்சியிலே பெரும் பங்காற்றி வரும் ஆலய பரிபாலன சபையினர் தமது அயராத உழைப்பின் மூலம் இன்று இவ்விழாவினை சிறப்புற ஒழுங்குபடுத்தியுள்ளனர். இன்நன்நாளில் அடியவர்களின் வாழ்வில் இன்னல்கள் நீங்கி அறநெறி மிக்க சமுதாயத்தை உருவாக்குவதற்கான ஆற்றலை அருளும் வகையில் எல்லாம் வல்ல ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆசியை வேண்டுவதுடன் இவ் மஹோற்சவத்தை முன்னெடுக்கும் ஆலய அறங்காவலர் சபை. அந்தண சிவாச்சாரியர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பிரதேச செயலாளர்.**
**சங்கானை.**

### தலைவரின் வாழ்த்துச்செய்தி



எமது ஆலய இரதோற்சவ சிறப்பிதழ் வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். "என் கடன் அவள் பணிசெய்து கிடப்பதே" என்பதற்கிணாங்க வட்டுக்கிழக்கு வட்டுக்கோட்டை துறட்டிப்பனை ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்கு புதிய தசகோண சிற்பத் தேர் அமைக்க ஒத்துழைப்பு நல்கிய அனைத்து உள்ளூர். வெளியூர் தர்ம உள்ளம் கொண்ட அடியவர்கள் அனைவரையும் முதலில் பணிந்து அவர்களுக்கு எம் மனமார்ந்த கோடி நன்றிகள். நாளை இரதோற்சவம் நடைபெறுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம். இச்செயல் அம்பாளின் அருள் அன்றி வேறெதுவும் இல்லை. எம்மை கருவியாகப் பயன்படுத்தி தனக்கு தேவையானதை தானே பெற்றுக் கொண்டாள் என்பதே உண்மை. தேர். தரிப்பிடம் என்பன அமைந்திருப்பது எம் எல்லோர் மனங்களிலும் பெரும் மன நிறைவைத்தருகின்றது. இது எமது கிராம மக்களின் ஒற்றுமையை பறை சாற்றுகின்றது. உங்களது ஆன்மிகப் பணியால் இன்று எமது ஆலயம் துரிதகதியில் பெருவளர்ச்சி அடைந்துவருகின்றது. தசகோண சிற்பத்தேர் நிகழ்வு சிறப்புற அடியவர்களுடன் நாமும் வாழ்த்துவதோடு இக் கைங்காரிய இறை பணியில் எம்மோடு பயணிக்கும் அடியவர்கள் அனைவருக்கும் அம்பாளின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டும் என பிரார்த்திக்கின்றோம்.

அம்பிகை புரண அருளாட்சி அமைந்ததே அழகுறு தேரது
தும்பிமுகன் தாயவள் தொன்மை ஊரினில் துறட்டிப் பனையில்
நம்பிக்கைப் பிராட்டி நாயகி முத்துமாரி நயந்த தேரினை
தம்கை கூப்பியே தளராது வணங்கிட வாரீர் வாரீர்

**தலைவர்**
**இ.சிவகுமார்**
**வட்டுக்கிழக்கு துறட்டிப்பனை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம் பரிபாலனசபை.**

### ஆச்சாரியாரின் வாழ்த்துச் செய்தி



எல்லாம் வல்ல வட்டுக்கோட்டை துறட்டிப்பனை ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் பாதார விந்தங்களை இருகரம் இறுகப் பற்றி வணங்குகிறோம்.

இவ் ஆலயத்தில் முன்னைய காலங்களில் மூன்று வாகனங்களை எமது கைவண்ணத்தில் உருவாக்கினோம். அதனைத் தொடர்ந்து ஆலய அன்னதான சபை மற்றும் சபை தலைவர் இரத்தினதுரை சிவகுமார் அவர்களின் வேண்டுதலின் பேரில் 2025 ம் ஆண்டு ஆடி பௌர்ணமி தினத்தில் ( தசகோண ) திராவிரமரபு சிற்பத்தேரை நிர்மானிப்பதற்கு அங்குரார்ப்பண நிகழ்வும் ஒப்பந்தமும் செய்யப்பட்டது. தொடர்ந்து வேலைகள் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் அன்னை முத்துமாரி தாயின் அனுக்கிரகத்தால் எனது சிந்தனையில் (தசகோண ) கலிங்க மரபுத் தேரை நிர்மானிக்க வேண்டும் என்ற எண்ணம் உதித்தது. அதற்கு சபையினரின் பெரும் ஆதரவும் வழங்கப்பட்டு இத் தேரின் வேலைகள் அனைத்தும் பூர்த்தியாகி நாளையதினம் இரதோற்சவம் காணுகின்ற பெரும் பேறை அடியேனும் பெற்றுள்ளேன்.

சுபம்

**A.T. P கோகுலன் ஸ்தபதி**
**ஸ்ரீ குலவாணி சிற்பாலயம்,**
**திருநெல்வேலி.**

### தேரின் மகிமை

ஆலய விழாவாக தேர் இழுப்பதை நாம் நமது உடம்பை ஒட்டிய வாழ்க்கைக்கு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். தேரில் இருப்பதைப் போல் நமக்குள்ளும் இறைவனின் விம்பம் இருக்கிறது. தேரை இழுப்பதைப் போல ஆசா பாசங்கள் நம்மையும் இழுக்கின்றன. ஊர்வலம் முடிந்தவுடன் சுவாமி திரும்ப ஆலயத்துக்குள் போய் விடுகிறார். வாழ்க்கையை முடித்த நமது ஆத்மாவும் அதுவரை வாழ்ந்த உடலை விட்டு இறைவனிடம் திரும்பிவிடுகிறது.

கோயிலும் தேரும் இறைவன் உறையும் இடம். தேர் அனைத்து மக்களையும் சந்திக்க வைத்து உறவாட வைக்கும் ஒரு சமுதாய கேந்திரமாகவும் பயன்படும். உயர்ந்த எண்ணங்களைப் பரிமாறிக் கொள்ள பயன்படும். ஊரை ஒற்றுமையாகக் கூட்டி வைக்க கூடிவாழச் செய்ய மக்களின் ஒற்றுமை சின்னமும் தேர் ஆகும். மக்களுக்கு ஆனந்தத்தையும் பக்தியையும் இது ஏற்படுத்தும். அது போல் இன்னுமொன்று. ஆண்டுதோறும் தெருவில் தேர் ஓடுவதால் தெருப்பராமரிப்பு நடக்கும். வியாபாரம் பெருகவும். சிறு வியாபாரிகள் பயன் அடையவும். குடிசைத் தொழில் செய்பவர்கள் விற்பனை செய்யவும் வாய்ப்பு கிடைக்கிறது. இப்படியான தேரை அன்பு நிறைந்த உள்ளத்துடன் நம்பிக்கையோடும் பக்தியோடும். வணங்கி இறைவனின் அருளைப் பெறுவோமாக.

### குருக்களின் ஆசியுரை



அம்பிகை அடியார்களே !

திருவருள் நிறைந்த துறட்டிபனை என்னும் பதியில் குடி கொண்டு அருள் புரியும் அகில புவன மாதா முத்துமாரி அம்பாளின் ஆலயத்தில் அன்னைக்கு புதிய சித்திரத்தேர் அமையப் பெற்றது மிகப் பெரிய வரப்பிரசாதமாகும். மஹோற்சவ காலத்தில் தேர்த்திருவிழா மிகவும் முக்கியமானதும் மேன்மை பொருத்தியதுமான பல வடிவான கோணங்களில் தேரின் அமைப்புக்களை ஆகமங்களில் காணமுடிகிறது. எம்பிராட்டி தேரில் ஏறிவரும் போது அடியார்களுக்கு சாம்பவ தீட்கைஷ வழங்குவார். "ராதா ரோகண காலே சர்வகாம பலப்பிரதம் ஆயள் விருத்தி காம் சைவ ஆரோக்கியம் புஷ்டி வர்த்தனம்" என்பது ஆகம வாக்கியம் இரண்டின் படி அம்பிகை (சுவாமி) தேரில் ஏறி வரும் காட்சியைப் பார்த்தால் எல்லா விருப்பங்களும் நிறை வேறும் நீண்ட ஆயுள் கிடைக்கும் வியாதிகள் நீங்கும். திடகாத்திரமான தேகம் உண்டாகும் என காண்க தேரின் உள்ளே கிழக்கு பாகத்தில் முருகப் பெருமானும் தென் பாகத்தில் தட்சணாமூர்த்தியும், மேற்குப் பாகத்தில் மஹா விஷ்ணுவும். வட பாகத்தில் பிரம்ம தேவரும். சக்கரங்களில் ஆர்ய சந்திரர்களும். அஸ்டராகங்களும். சதுர் வேதங்களும் நிறைவாக அமைவதாக (உத்தரகாரண) ஆகமம் கூறுகிறது தேர் வெள்ளோட்டம் கண்டபின் ஆச்சார்யார் ரதப் பிரதிஷ்டை செய்தல் வேண்டும். அதில் மந்திர. பதபுவன. தத்துவங்கள் பூஜை செய்யப்படும். நிறைவாக சுப முகூர்த்த வேளையில் அம்பிகையை எழுந்தருள செய்து வேத்கோச. மங்கள வாத்தியம் திருமுறை சங்கு துண்துபி முதலான சர்வமங்கல வாத்தியங்கள் முழங்க கொடி குடை. ஆலவட்டம் சமர்ப்பித்து அம்பிகை மஹா ராஜ வீதியில் அழைத்து வர வேண்டும். என காண்க அம்பிகையின் இத்தேர் திருப்பணியை செய்தவர்கள் விழாவில் கலந்து கொண்டவர்கள் அனைவருக்கும் சகல நன்மைகளும் கிடைக்க பெற்று வாழ்த்தி ஆசீர்வதிக்கிறேன்.

**பிரதிஷ்டா இரத்தினம்**
**சிவ ஸ்ரீ. சு. மதுசூதனக்குருக்கள் பிள்ளையார் கோவில், சித்தங்கேணி**

### செயலாளரின் வாழ்த்துச் செய்தி



எமது வட்டுக்கோட்டை துறட்டிப்பனையில் பதிகொண்டிருக்கும் ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் : பாதார விந்தங்களைப் பணிந்து கொண்டு அம்மாளின் இரதோற்சவ மலருக்கு வாழ்த்துச் செய்தியை அளிப்பதில் ஆலய செயலாளராகிய நான் பெருமையடைகின்றேன். தொன்று தொட்டு பலதரப்பட்ட வரலாற்று சிறப்பம்சங்களை எமது அம்பாளின் ஆலயமானது கொண்டுள்ளது. அத்தோடு எமது இளைஞர்களின் ஆன்மீக விழுமியங்கள் பற்றிய சிந்தனைகளையும் கட்டுப்பாடுகளையும் எமது பயணத்தில் கற்று வருகிறார்கள். ஆலய அன்னதான சபையினரும் உள்ளூர். வெளியூர் மக்களும் இணைந்து கடந்து வந்த பயணத்தில் அம்பாளின் அருளாசியுடன் தேர் அமைப்பிற்கு உள்நாட்டு. வெளிநாட்டு அன்பர்களின் ஆதரவுடன் அம்பாளின் அருளாசியுடன் புதிய தசகோண சிற்பத் தேர் அமைக்கப்பட்டது என்பது பெருமையான ஒன்றாகும். இரதோற்சவம் சிறப்புற அமைய அம்பாளை வேண்டுவதோடு அனைவருக்கும் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**"வாரீர் வடம் பிடிப்போம் ஊர் கூடி**
**எம் பெருமான் வரம் பெறுவோம்"**

**செயலாளர்**
**க.ஜெயக்குமார்**
**துறட்டிப்பனை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம் பரிபாலனசபை.**

### ஆசிச் செய்தி



துறட்டிப்பனை ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்கு ஆலய அன்னதான சபையினரின் அயராத முயற்சியின் பலனாக கலையம்சங்களோடு கூடிய தசகோண தேர் ஒன்று உருவாக்கப் பட்டிருக்கின்றது. இத் தேர் உருவாக்கிய ஸ்தபதி குழுவினருக்கும். தேர் உருவாகுவதற்கு பலவழிகளிலும் பேருதவிகள் புரிந்த எம் அம்பாளுடைய மீளா அடியவர்கள் அனைவருக்கும் அம்பாளது திருவருள் என்றென்றும் நிறைய வேண்டும் என பிரார்த்தித்து நல்லாசிகள்" கூறுவதில் மன மகிழ்வு கொள்கின்றோம்.

**ஆலய குரு**
**பிரம்மஸ்ரீ பா.அமிர்தேஸ்வரசர்மா**
**(குறட்டிப்பனைப்பதி, வட்டுக்கோட்டை)**

**புதிய சித்திரத்தேர் உபயம் - அன்னதானசபை.**
**தேர் [illegible] இராசையா, ஈஸ்வரகுமாரன் குடும்பம்**
**வாழ்த்துவோர் - அன்னதான சபையினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரை முடித்துவைத்ததால் பழிவாங்கப்படும் கடற்படை

## விமல் வீரவன்ஸ கண்டுபிடிப்பு

கொழும்பு, ஓக.7

புலிகளின் ஆயுதக் கப்பல்களை அழித்துப் போரை முடிப்பதற்குக் கடற்படையினர் முக்கிய மான பங்களிப்பு வழங்கினர். எனவேதான் புலிகள் மற்றும் டயஸ்போராக்களின் தேவைக்காக படையினர் பழிவாங்கப்பட்டுவருகின்றனர்என்றுதேசியசுதந்திரமுன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

முன்னாள் கடற்படைத் தளபதி கைது செய்யப்பட்டுள்ளார். படையில் இருந்த ஒருவருக்கு சலுகைகளை வழங்குவதாக உறுதியளித்து, அவரிடமிருந்து முறைப்பாட்டைப் பெற்றுக்கூட படைத்தளபதிகள் கைதுசெய்யப்படலாம்.

முன்னாள் கடற்படைத் தளபதி புலனாய்வு அதிகாரியாக இருந்த காலத்தில் இடம்பெற்ற சம்பவமொன்று தொடர்பிலேயே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவ்வாறு படையினர் மற்றும் புலனாய்வாளர்கள் பழிவாங்கல்களுக்கு உட்படுத்தப்பட்டுவருகின்றனர். போர்க்காலத்தில் கடற்படையினர் முக்கியமான பங்களிப்பை வழங்கினர். புலிகளின் ஆயுதக் கப்பல்கள் அழிக்கப்பட்டன. போரை முடிப்பதற்கு இந்த நடவடிக்கை முக்கியமான பங்கு எனலாம். எனவேதான் படையினர் தற்போது துரத்தப்பட்டு பழிவாங்கப்பட்டுவருகின்றனர். இது புலிகளின் தேவைப்பாடாகும். டயஸ்போராக்களின் தேவைப்பாடாகும் - என்றார். (எ-44)

# சுயதொழில் உற்பத்திக்கு கடன்பெற விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஓக. 7

யாழ். மாவட்ட மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் இணையம் மாவட்டத்தில் சுயதொழில் உற்பத்தியில் ஈடுபடும் பெண்களை ஊக்குவிக்கும் வகையில் குறைந்த வட்டியில் 50 ஆயிரம் ரூபா சுயதொழில் கடன் வழங்கவுள்ளது. சுயதொழில் உதவிக் கடன் பெற விரும்பும் இணையத்தில் அங்கத்தவராகவுள்ளோர் மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின்மூலம் விண்ணப்பிக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25, 9)

# மரண அறிவித்தல்

தோற்றம்
14 . 09 . 1948



மறைவு
04 . 08 . 2025

## யோகேஸ்வரி அரசபிள்ளை

நல்லூர் சட்டநாதர் வீதியைப் பிறப்பிடமாகவும், நல்லூர் அரச வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட யோகேஸ்வரி அரசபிள்ளை (கிளி அக்கா) அவர்கள் கடந்த (04.08.2025) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பசுபதி-சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து-அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அரசபிள்ளை அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, பரமேஸ்வரி, புவனேஸ்வரி, செல்வராஜா ஆகியோரின் சகோதரியும், சந்திரமோகன் (UK-சந்திரன்), சித்திரா (UK-சுசி) ஆகியோரின் அன்புத் தாயாரும், பிரியதர்சினியின் அன்பு மாமியாரும், ஸ்ரெவாணி, றொசான், நவீட், காரா, செரீனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.08.2025) வியாழக்கிழமை 46/4, அரச வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 03.00 மணியளவில் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்

தொடர்புகளுக்கு:
சாந்தன்-077 921 7900
பிள்ளைகள்-077 627 2813

தகவல்:
குடும்பத்தினர்.

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
13 . 04 . 1936



மறைவு
30 . 07 . 2023

## அமரர் இரட்டிணஜோதி தருவாலம்பிகை

(மம்மி) (07.08.2025)

திதி. ஆடி மாதம் வளர்பிறை துவாதசி

அன்புடன் எங்களை ஈன்றெடுத்து
அப்பாவாகவும் அம்மாவாகவும் வளர்த்தெடுத்து
நல்வழிப் படுத்திய உங்கள் முகம்
குரல் பெயர் மறக்க முடியுமா
உங்களது பிரிவு எம்மால் தாங்க
முடியவில்லையே. எந்நாளும்
உங்கள் நினைவுகளுடன்
வாழ்ந்திருப்போம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

# கேள்வி அறிவித்தல்

## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்

1. தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய், அவர்கள் தகுதி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்வரும் அட்டவணைகளில் விபரிக்கப்பட்டவாறு கோருகின்றார்.
2. இக்கேள்வி கோரலானது தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கோரப்படுகின்றது.
3. இக்கேள்வியானது பொருத்தமான வியாபார அல்லது கம்பனிப்பதிவுகளை கொண்டுள்ளதும், கறுப்புப் பட்டியலில் (Black list) சேர்த்துக்கொள்ளப்படாததுமான கேள்விதாரருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் எனும் முகவரியில் 2025.08.07 ஆம் திகதி தொடக்கம் 2025.08.21 ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப 09.00 தொடக்கம் பி.ப 03.00 மணி வரை மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2,000.00 (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதி, நகல்பிரதி என தனித்தனி உறைகளிட்டு தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் எனும் முகவரிக்கு 2025.08.22 ஆம் திகதி அன்று மு.ப 10.30 மணிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, யாழ் வீதி மானிப்பாய் எனும் முகவரியில் (தொலைபேசி ,லக்கம் 021 225 6651) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | கேள்வி எண் | விபரம் | | தேவைப்படும் எண்ணிக்கை | பொருள் வழங்கப்பட வேண்டிய காலம் | கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணைவைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | NP/14/41(16)/03/ A5/STA/2025/01 கற்றல் உபகரணங்கள் | பெரிய சதுர றூள் கொப்பி | 120 P | 942 | கொள்வனவுக் கட்டளை வழங்கிய நாளிலிருந்து 15நாட்கள் | 10,000.00 | 2025.11.02 |
| 02 | | நாலு றூள் கொப்பி | 160 P | 942 | | | |
| 04 | | ஒற்றை றூள் கொப்பி | 160 P | 2414 | | | |
| 05 | | சதுர றூள் கொப்பி | 160 P | 552 | | | |
| 06 | | சித்திரக் கொப்பி | 40 P | 08 | | | |
| 07 | | பென்சில் | | 1256 | | | |
| 08 | | குமிழ்முனைப் பேனா | | 736 | | | |
| | | கலர் சோக் பெட்டி (24கலர்) | | 06 | | | |
| | | கலர் பென்சில் பெட்டி (12 கலர்) | | 02 | | | |

தலைவர்
உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்

2025.08.07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# துணுக்காய்ப் பிரதேசத்தில் குறைகேள் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஒக.7

துணுக்காய்ப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட திருநகர் கிராம சேவகர் பிரிவில் 'மக்கள் குறை கேள் செயற்றிட்ட நடமாடும் சேவை' பிரதேச செயலாளர் தலைமையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

சந்திப்பில் கலந்துகொண்ட பொதுமக்கள் ஒவ்வொருவரிடமும் தனித்தனியாக முறைப்பாடு பெறப்பட்டு அவற்றுக்கான தீர்வுகள் தொடர்பாக ஆராயப்பட்டன. (ச-25, 35)


# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 21.02.1956 இறப்பு 06.08.2025



அமரர் திருநாவுக்கரசு சுந்தரலிங்கம்


நாரந்னை சரவணை கர்ணந் தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் பரிபாலன சபைத்தலைவராகவும், முன் செயலாளராகவும் நீண்டகாலம் பதவிவகித்து அமரத்துவவம் அடைந்த அமரர் திருநாவுக்கரசு சுந்தரலிங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடைய கர்ணக் தோட்ட கந்தனைப் பிரார்த்தித்து துயருற்றிருக்கும் மனைவி, பிள்ளைகள், உற்றார் உறவினட்களிற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து கொள்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

ஆலயபரிபாலன சபை,
இராஜகோபுர திருப்பணிச்சபை
நாரந்னை சரவணை கர்ணந் தோட்டம் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள் கோவில்.

# மரண அறிவித்தல்

தோற்றம் 05.07.1969 மறைவு 30.07.2025



## கணநாதன் - ஸ்ரீஸ்கந்தராசா
(இளங்கோ)

யாழ்ப்பாணம் - கந்தர்மடம், மணல்தறை ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், லண்டன் - பர்மிங்காமை வசிப்பிடமாகவும் கொண்ட கணநாதன்-ஸ்ரீஸ்கந்தராசா (இளங்கோ) அவர்கள் (2025.07.30) புதன்கிழமை அன்று லண்டனில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் யாழ்ப்பாணம் கந்தர்மடத்தை சேர்ந்த காலஞ்சென்றவர்களான தம்பு கணநாதன் (குணம்)- சரஸ்வதி (மலர்) தம்பதியினரின் அன்புக்குரிய ஏகபுதல்வனும் மைதிலி (யாழ்ப்பாணம்), வைதேகி (பிரான்ஸ்), ஜானகி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோரனும் ஆவார்.

லண்டனில் நடைபெறவுள்ள அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இத் தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

மைதிலி விசாகரூபன்
+94 021 222 5363
வைதேகி சிவானந்தன்
+33 652 676 665
ஜானகி தேவதாசன்
+61 432 679 499

தவல் :
அன்புச் சகோதரிகள்


# வலிகாமம் மேற்கு பிரதேச சபை - சுழிபுரம்

## சபைக்குச் சொந்தமான சங்கானை மரக்கறிச் சந்தை வளாகத்தில் கிழக்குப் புறமாக புதிதாக அமைக்கப்பட்ட மேல்மாடி கடைகள்இ சங்கரத்தை சந்தை மேல்மாடி கடைகள் நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி கோரல்

சபைக்குச் சொந்தமான கீழ்க்குறிப்பிடப்படும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட கடைகளை நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்காக குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளிற்கு அமைவாக வலிகாமம் மேற்கு பிரதேச சபையால் கேள்வி கோரப்படுகின்றது.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 2025.08.07 - 2025.08.28 பி.ப 03.00 மணி வரை

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 2025.08.28 மு.ப 10.30 மணி வரை
கேள்விதிறக்கும் திகதி :- 2025.08.28 மு.ப 10.30 மணி

கேள்விப்பத்திரம் திறக்கும் இடம் :- வலிகாமம் மேற்கு பிரதேச சபை தலைமை அலுவலகம்

நீண்டகால குத்தகை

அட்டவணை I

| தொ. இல | கடை விபரம் | மாதாந்த வாடகை | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| Oodakarai Lane- Upper Floor | | | | | |
| 01 | Shop 11 FF | 7,000.00 | 1,260,000.00 | 100,000.00 | 2,000.00 |
| 02 | Shop 12 FF | 7,000.00 | 1,260,000.00 | 100,000.00 | 2,000.00 |
| 03 | Shop 13 FF | 7,000.00 | 1,260,000.00 | 100,000.00 | 2,000.00 |
| 04 | Shop 15 FF | 7,000.00 | 1,260,000.00 | 100,000.00 | 2,000.00 |
| 05 | Shop 16 FF | 3,500.00 | 630,000.00 | 100,000.00 | 2,000.00 |

அட்டவணை II

| தொ. இல | கடை விபரம் | மாதாந்த வாடகை | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| Upper Floor Shop – Sangaraththai Market Vaddukoddai | | | | | |
| 01 | Shop UF01 | 4,500.00 | 1,080,000.00 | 100,000.00 | 2,000.00 |
| 02 | Shop UF02 | 4,500.00 | 1,080,000.00 | 100,000.00 | 2,000.00 |
| 03 | Shop UF03 | 4,500.00 | 1,080,000.00 | 100,000.00 | 2,000.00 |
| 04 | Shop UF04 | 4,500.00 | 1,080,000.00 | 100,000.00 | 2,000.00 |
| 05 | Shop UF05 | 4,500.00 | 1,080,000.00 | 100,000.00 | 2,000.00 |

நிபந்தனைகள்

அட்டவணை I

விண்ணப்பதாரி இலங்கையில் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

அட்டவணை II

விண்ணப்பதாரி வலிகாமம் மேற்கு பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

1. கேள்விப் பத்திரம் / பத்திரங்கள் பெறவிரும்புவோர் விண்ணப்பங்களுடன் அடையாள அட்டையையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன் தாம் வதியும் இடத்தின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
2. கடை வாடகை சம்பந்தமாக சபையினால் நிர்ணயிக்கப்படும் மாதாந்த வாடகையை குறித்த மாத இறுதிக்கு முன் செலுத்தி பற்றுச்சீட்டு பெறுவதற்கும் இக்கால எல்லைக்குப் பிந்திச் செலுத்தப்படும் வாடகைத் தொகையின் 10% தண்டப்பணம் செலுத்துவதற்கும், தொடர்ந்து மூன்று மாதங்கள் பணம் செலுத்தத் தவறினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.
3. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரித்து **தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்** என்ற முகவரிக்கு **28.08.2025** ம் திகதி மு.ப 10.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக நேரடியாகவே அல்லது பதிவுத்தபால் மூலமாகவே அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது மேற்படி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்தியகேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம்முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கபெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.
4. சித்திகர கேள்விதாரராக தாங்கள் தெரிவு செய்யப்பட்டால் 04.09.2025 ம் திகதிக்கு முன்னர் ஒருங்கிணைந்த கட்டுப்பணம் முழுத்தொகையையும் ஒரே தடவையில் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும். ஒப்பந்தம் கைச்சாத்திட்டு இரு வாரத்திற்குள் பிரதேச சபையிடம் உரிய வியாபாரத்திற்கான வியாபார உரிமத்தினைப் பெற்று வியாபாரம் அல்லது தொழில் ஆரம்பிக்கப்படல் வேண்டும் என்பதனுடன் தகுந்த காரணங்களின்றி வியாபார நிலையம் பூட்டி வைத்தல் கூடாது.
5. சித்தி பெறும் கேள்விதாரர் சந்தையில் விற்பனை செய்யப்படும் பொருட்களையோ அல்லது பிரதேச சபையினால் அங்கீகரிக்கப்படாத பொருட்களை விற்பனை செய்வதோ அல்லது மதுபான வகைகளையோ அல்லது போதைவஸ்துக்களையோ அல்லது தடை செய்யப்பட்ட வேறு எந்தப் பொருட்களையோ விற்பனை செய்வது தடை செய்யப்படுவதுடன் கடைக்கட்டடம் வேறு எந்த சட்ட விரோத நடவடிக்கைகளுக்கும் பாவித்தல் கூடாது.
6. சித்திபெற்ற குத்தகைக்காரர் வலிகாமம் மேற்கு பிரதேச சபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்து கொள்ளல் வேண்டும்.
7. சித்திபெற்ற குத்தகைகாரர் பாதுகாப்பு வைப்பு பணமாக 03 மாத வாடகைத் தொகையினை முற்பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
8. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிமக்கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமைச் சான்றிதழையும் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
9. மேலதிக விபரங்களை வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
பெறுகைக்குழு
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.
07.08.2025

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித லவுரேஞ்சியார் ஆலயப் பெருவிழா



மன்னார், ஓக.7
தலைமன்னார் புனித லவுறேஞ்சியார் ஆலய வருடாந்தவிழா கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.
கொடியேற்றத்தைத் தொடர்ந்து ஒன்பது தினங்கள் மாலை 5 மணிக்குத் திருச் செபமாலையுடன் நவநாள் திருவழிபாடுகள் நடைபெறும்.
ஒன்பதாவது நாள் நற்கருணை வழிபாடும் பத்தாம் நாளான எதிர்வரும் 10ஆம் திகதி காலை 6 மணிக்குத் திருவிழாத் திருப்பலி மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி கிறிஸ்துநேசன் அடிகளார் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படும். தொடர்ந்து புனித லவுறேஞ்சியாரின் திருச் சூருபப் பவனியும் இறையாசீரும் இடம்பெறும். (ச-60)

## ஹேமச்சந்திர...

தொடர்புகள் உள்ளன என்று முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியில் விடுதலைப் புலிகளின் ஆதரவு நிலைப்பாடு அரசாங்கத்துக்கு வெளியில் இருந்தது. குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அரசாங்கத்துக்கு வெளியில்தான் இருந்தனர். ஆனால், தற்போது அரசாங்கத்துக்கு உள்ளேயே விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் உள்ளனர். அவ்வாறானதொரு நபர்தான் வெளிவிவகார பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர.
கடந்த உள்ளூராட்சித் தேர்தலின்போது வல்வெட்டித்துறையில் நடைபெற்ற பரப்புரையில் பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர கலந்துகொண்டார். இதன்போது, பிரபாகரனுக்குச் சிலை அமைக்கப்படும் என்று இவரே தெரிவித்திருந்தார். அந்தப் பரப்புரையில் புலிகளின் பாடல்களுக்கு நிகரான பாடல்கள் உருவாக்கப்பட்டிருந்தன. எனவே, அரசாங்கத்துக்கு வெளியே அல்ல உள்ளேதான் தற்போது புலிகளின் ஆதரவாளர்கள் உள்ளனர். அதனால்தான் படையினர் கொடூரமாகப் பழிவாங்கப்படுகின்றனர் - என்றார். (அ-ம)

## கிளிநொச்சியில்...

துக்கு முன்பாக இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கி பயணித்த சுகாதார அமைச்சுக்கு சொந்தமான கப்ரக வாகனம் வீதியை கடக்க முற்பட்டவர் மீது மோதியதிலேயே விபத்து சம்பவித்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
உயிரிழந்தவர் திருகோணமலையைச் சேர்ந்தவர். விபத்துத் தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (அ-ம-113)

## காற்றாலைக்கு...

போராட்டம் இடம்பெற்றது. மன்னாரில் இல்மனைட் அகழ்வு, சட்டவிரோத மணல் அகழ்வு, அத்துமீறி அமைக்கப்படும் காற்றாலைத் திட்டம் ஆகியவற்றுக்கு எதிராக மன்னார் மாவட்ட இளைஞர்கள் இணைந்து 'கருநிலம் பாதுகாப்பு' என்ற தொனிப்பொருளில் விழிப்புணர்வுப் போராட்டத்தை நேற்று முன்னெடுத்தனர்.
போராட்டத்தை முன்னிட்டு, பஜார் பகுதியில் இருந்து நகரப் பகுதிவரை அவர்கள் பேரணியாகவும் சென்றனர். போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் தெரிவித்ததாவது:-
மன்னார் மாவட்டத்தின் இயற்கை வளங்களில் ஒன்றாக மணல் உள்ளது. இந்த மணல், இல்மனைட் கனிமத்தை கொண்டிருப்பதால் உலகளவில் பெரும் கேள்வி காணப்படுகின்றது. கடந்த சில ஆண்டுகளுக்கும் மேலாக அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த பல்தேசிய நிறுவனம் ஒன்று மன்னாரில் இல்மனைட் மணல் அகழ முயற்சித்துவருகிறது.
இதற்கான அனுமதிகள் இழுபறியில் இருந்த போதிலும் தற்போதைய அரசாங்கத்தின் கீழ் அந்த அனுமதியை வழங்குவதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. அவுஸ்திரேலிய நிறுவனம் அகழ்வுக்கான சூழலியல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை ஒன்றை சுற்றுச்சூழல் அதிகாரசபையிடம் சமர்ப்பித்துள்ள நிலையில், சுற்றுச்சூழல் அதிகாரசபை சாதகமான பதிலை வழங்கியுள்ளதாக அறிகின்றோம். இல்மனைட் மணல் அகழப்பட்டால் அடுத்த 10 ஆண்டுகளுக்குள் மன்னார் மாவட்டத்தின் கணிசமான நிலங்களுக் குள் கடல் நீர் உட்புகுந்து மக்களின் வாழ் விடங்களையும் பூர்வீக நிலங்களையும் அழித்துவிடும் அபாயம் உள்ளது. எனவே, இந்தப் பேரழிவு நிலையைத் தடுத்து நிறுத்துவதே இந்தப் போராட்டத்தின் நோக்கமாகும் - என்றனர். (அ-ம-56-60)

## பயங்கரவாதத்...

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
பயங்கரவாத தடைச்சட்டம் முற்றாக நீக்கப்படும் எனவும், அதற்குப் பதிலாக மாற்று சட்டம் கொண்டுவரப்படமாட்டாது எனவும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வரும்போது உறுதியளித்திருந்தது.
நிலைமை இவ்வாறிருக்க ஒரு வருடம் ஆகியும் பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படவில்லை. எனவே, விரைவில் அது முற்றுமுழுதாக நீக்கப்பட வேண்டும். அதற்குப் பதிலாக வேறு எந்தச் சட்டங்களையும் கொண்டுவரக்கூடாது.
பயங்கரவாதத் தடைச்சட்டத்தால் நாட்டில் பாரதூரமான இழப்புகள் ஏற்பட்டுள்ளன. ஜே.வி.பி.யினர்கூட பெரும் துன்பங்களை எதிர்கொண்டுள்ளனர். எனவே, கடந்தகால வரலாறுகளை உணர்ந்து அந்தச் சட்டத்தை விரைவாக நீக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (அ-ம-44)

## செருப்பு,...

அரியாலை செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து செருப்புடனும், தாயத்துடனும் என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன.
செம்மணிப் புதைகுழிக்குள் செருப்புடனும், தாயத்துடனும் என்புத் தொகுதிகள் நேற்றுமுன்தினம் அவதானிக்கப்பட்டிருந்தன. அந்த இரண்டு என்புத் தொகுதிகளுமே தொடர்ச்சியாக அகழ்வு பணிகளைத் தொடர்ந்து நேற்று மீட்கப்பட்டன. அத்துடன், தாயத்து, நாணயம் உள்ளிட்ட சான்றுப் பொருள்களும் மீட்கப்பட்டுள்ள நிலையில், அவை நீதிமன்றக் கட்டுக்காவலின் கீழ் வைக்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

## அகழ்வுப்...

அரியாலை - செம்மணிப் புதைகுழியில் இரண்டாம் கட்டமாக இடம்பெற்றுவரும் அகழ்வுப் பணிகளின் இரண்டாம் கட்ட நடவடிக்கைகள் இன்றுடன் தற்காலிகமாக நிறுத்தப்படவுள்ளன.
45 நாள்களைக் கொண்ட இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் மூன்று பகுதிகளாக இடம்பெற்றுவரும் நிலையில், இரண்டாம் கட்டத்தின் இரண்டாம் பகுதி அகழ்வுப் பணிகளே இன்றுடன் நிறைவுக்கு வரவுள்ளன. எதிர்வரும் 21ஆம் திகதியளவில் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-ம-26)

## செம்மணிப்...

அரியாலை - செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்று இடம்பெற்ற அகழ்வுப் பணிகளின்போது, மேலும் ஆறு என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.
செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான இரண்டாம் கட்ட அகழ்வின் 32ஆம் நாள் நடவடிக்கைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. இதன்போதே மேலும் ஆறு என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இதன்படி இதுவரை அடையாளம் காணப்பட்ட என்புத் தொகுதிகளின் எண்ணிக்கை 147ஆக அதிகரித்துள்ளது.
நேற்று மேலும் 3 என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ள நிலையில், இதுவரை மீட்கப்பட்ட என்புத் தொகுதிகளின் எண்ணிக்கை 133ஆக அதிகரித்துள்ளது. (அ-ம-26)

## மல்லாவி...

கள் உள்ளிட்ட 19 பேருக்கு எதிரான வழக்கு எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 29ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டது.
மாங்குளம் நீதிமன்றத்தில் வழக்கு நேற்று விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டபோது எதிராளிகள் சார்பில் சட்டத்தரணி எஸ்.வி.தனஞ்சயன் உட்பட மூன்று சட்டத்தரணிகள் முன்னிலையாகியிருந்தனர். இதுவொரு அமைதிப் பேரணி என்ற விடயத்தை அவர்கள் மன்றுரைத்தனர். சமர்ப்பணங்களை கேட்டறிந்த மன்று, வழக்கை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 29ஆம் திகதிக்கு தவணையிட்டது. (அ-ம-35)

## காற்றாலைப்...

மன்னாரில் இரண்டாம் கட்டமாக காற்றாலைக் கோபுரங்களை அமைப்பதற்கான பணிகள் அண்மைக்காலமாக முன்னெடுக்கப்பட்டன. இதற்கு மக்கள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தி வந்தனர். காற்றாலைக் கோபுரங்களை அமைப்பதற்கான உதிரிப்பாகங்களுடன் பிரமாண்டமான வாகனங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை அணிவகுத்துவருகின்றன என்ற தகவலை அறிந்து, வீதியை இடைமறித்து மக்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.
இதனால், அந்த வாகனங்கள் கடந்த மூன்று நாள்களாக மதவாச்சி பிரதான வீதி, முருங்கன் பகுதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. நேற்று அதிகாலை 3 மணியளவில் நூற்றுக் கணக்கான பொலிஸார், கலகமடக்கும் பொலிஸார் குவிக்கப்பட்டு, பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு மக்களின் பெரும் எதிர்ப்புக்கு மத்தியில் வாகனங்கள் தலைமன்னாருக்குள் அனுமதிக்கப்பட்டுள்ளன.
மன்னாரில் மக்களின் எதிர்ப்பை மீறி காற்றாலை அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டியிருந்தார். இதையடுத்து, நாடாளுமன்றத்தில் இன்று விசேட கலந்துரையாடல் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இவ்வாறான பின்னணியிலேயே காற்றாலைப் பாகங்களுடன் வந்த வாகனங்கள் மன்னாருக்குள் நுழைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-56-60)

## யாழ்ப்பாணத்தில்...

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைபெற்றுவருகின்றனர்.
இது தொடர்பில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனாநந்தா வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-
மலேரியாக் காய்ச்சல் காரணமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இருவர் சிகிச்சை பெற்றுவருகின்றனர். அவர்களில் ஒருவர் 38 வயதுடையவர். மற்றையவர் 29 வயதுடைய நபர். 38 வயதுடைய நபர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவிலும், 29 வயதுடைய நபர் மருத்துவ விடுதியிலும் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.
இவர்கள் ஐரோப்பியாவுக்குச் செல்வதற்காகச் சென்று ஆபிரிக்க நாடொன்றில் என்ற நாட்டில் தங்கியிருந்துவிட்டு, மீண்டும் விமானம் மூலம் கட்டுநாயக்கவுக்குத் திரும்பிய வர்கள். எனவே வெளிநாடுகளுக்கு, குறிப்பாக ஆபிரிக்க நாடுகளுக்குச் சென்றுவிட்டுத் திரும்புபவர்கள் கூடுதல் அக்கறையுடன் செயற்படவேண்டும்.
இது தொடர்பில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் விசேட செயற்றிட்டங்களை 'வருமுன் காப்போம்' என்ற அடிப்படையில் முன்னெடுத்தல் அவசியம் - என்றுள்ளது. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# டிசெம்பர் மாதத்திலிருந்து அரசின் வீழ்ச்சி ஆரம்பம்

ஆசு மாரசிங்க ஆரூடம்

**கொழும்பு, ஓக.7**

**இந்த அரசாங்கத்தின் வீழ்ச்சி எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதியில் இருந்துதான் ஆரம்பமாகும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஆசு மாரசிங்க தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது புதிய அரசாங்கம் ஒன்று உருவாகி முதலாவது வரவு -செலவுத் திட்டம் சமர்ப்பித்து அதை நடைமுறைப்படுத்தும்வரை செயற்படுவதற்கு இடங்கொடுக்க வேண்டும். இந்த அரசாங்கத்தால் நாட்டை இழுத்துச்செல்லமுடியுமா என்று இந்த வருடம் டிசம்பர் 31ஆம் திகதியாகும்போது தெரியவரும். அன்றுதான் அரசாங்கத்தின் வீழ்ச்சி ஆரம்பமாகும்.

இந்த நாடு மீண்டும் வீழ்வதை நாம் விரும்பவில்லை. மீண்டும் 2022ஆம் ஆண்டை நோக்கிப் போவதை நாம் விரும்பவில்லை. அரசாங்கம் இனியாவது நிலைமையை உணர்ந்து செயற்பட வேண்டும். இன்னும்கூட காலம் உள்ளது.

ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் இன்னமும் தங்களை எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்றே நினைத்துக்கொண்டிருக்கின்றனர். டொலரைச் சேமிப்பதற்கு இவர்கள் செய்கிற திட்டங்கள் எல்லாம் பிழையானவை. வாகனங்கள் கட்டுப்பாடுகள் இல்லாமல் இறக்குமதி செய்யப்படுகின்றன. இதனால் அதிகமான டொலர் குறையும்.

2028ஆம் ஆண்டில் கடனை அடைக்க முடியாமல் பெரும் சிக்கலுக்குள் இந்த நாடு தள்ளப்படும். 2028ஆம் ஆண்டுக்கு முன் வெளிநாட்டு முதலீடுகள் 10 பில்லியனாக இருக்கவேண்டும். அப்படி இல்லாவிட்டால் நிலைமை மோசமாகிவிடும் - என்றார். (எ-75)

## பாதுகாப்புப் பிரதியமைச்சர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை

எதிர்க்கட்சிகள் நடவடிக்கை

கொழும்பு, ஓக. 7

பாதுகாப்புப் பிரதியமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜயசேகரவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவருவதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி திட்டமிட்டுள்ளது.

இதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி, சர்வஜன அதிகாரம் உள்ளிட்ட எதிரணிகளும் ஆதரவு தெரிவித்துள்ளன.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நடைபெற்ற விசேட கூட்டமொன்றில் இதுதொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகள் சுதந்திரமாக இடம்பெறவேண்டுமானால் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் பதவி விலகவேண்டும் என எதிரணிகள் வலியுறுத்தின. எனினும், அவர் பதவி விலகவில்லை. இந்நிலையிலேயே அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவருவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் நடந்தபோது அருண ஜயசேகர, கிழக்கு மாகாணக் கட்டளைத் தளபதியாகச் செயற்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-44)



## பேரிடர் நிவாரணப் பொருள்கள் சீனாவால் நன்கொடை

கொழும்பு, ஓக.7

சீன அரசாங்கம் இலங்கைக்கு 400 மில்லியன் ரூபா பெறுமதியான பேரிடர் நிவாரண உபகரணங்களை நன்கொடையாக வழங்கியுள்ளது.

உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இலங்கைக்கான சீனத் தூதுவர் குய் சென் ஹொங், பாதுகாப்பு அமைச்சகச் செயலாளர், ஓய்வுபெற்ற விமானப்படைத் துணைத் தளபதி சம்பத் துயாக்கோந்தாவிடம் நிவாரணப் பொருள்களைக் கையளித்தார்.

மடிக்கக்கூடிய படுக்கைகள், நடமாடும் சுகாதார வசதிகள், மெத்தைகள், சமையலறை உபகரணங்கள், எரிவாயு அடுப்புகள், கூடாரங்கள், அமனோத் தாள்கள், படுக்கை விரிப்புகள், படகுகள், உயிர் காப்பு அங்கிகள், வெள்ளக் கட்டுப்பாட்டு அலகுகள், நீர்ப்பம்பிகள் மற்றும் பிற அத்தியாவசியப் பொருள்கள் போன்றவையே வழங்கப்பட்டுள்ளன. (எ-இ)



## தாயகம் திரும்பியோருக்கு உதவித்தொகை வழங்கல்

யாழ்ப்பாணம், ஓக.7

இந்தியாவிலிருந்து மீளத் திரும்பியவர்களின் சுமூகமான மீள் ஒருங்கிணைப்புக்கான உதவித் தொகை வழங்கும் நிகழ்வு யாழ். மாவட்டச் செயலர் ம. பிரதீபன் தலைமையில் அவரது அலுவலகத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

அதன்படி யு. என். எச். சி. ஆர் நிறுவனத்தால் சண்டிலிப்பாய் மற்றும் பருத்தித்துறைப் பிரதேச செயலகப் பிரிவுகளில் இந்தியாவிலிருந்து மீளத் திரும்பிய இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த ஐந்து பேருக்குத் தலா 90 ஆயிரம் ரூபா வீதம் மொத்தமாக 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா உதவித்தொகை வழங்கிவைக்கப்பட்டது. (ச-25,66)

## கோபா குழுவின் தலைவர் அரவிந்த எம்.பி. விலகல்!

கொழும்பு, ஓக. 7

தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அரவிந்த செனரத்ன கோபா குழுவின் தலைவர் பதவியில் இருந்து விலகியுள்ளார்.

கோபா குழுவின் தலைவர் பதவியை ஆளும் தரப்பு எதிர்க்கட்சிக்கு வழங்க இணக்கம் தெரிவித்துள்ளதால் பதவி விலகுவதாக சபைக்கு அறிவித்தார். (ம)

## மின்சார சட்டவரைவு: நேற்று நிறைவேற்றம்

கொழும்பு, ஓக. 7

இலங்கை மின்சார சட்டவரைவு 96 மேலதிக வாக்குகளால் நேற்று நிறைவேற்றப்பட்டது.

மின்சார சட்டம் தொடர்பான விவாதங்கள் நிறைவடைந்த நிலையில், அந்தச் சட்டவரைவு மீதான வாக்கெடுப்பு நேற்று மாலை இடம்பெற்றது. இதன்போது, 96 மேலதிக வாக்குகளால் சட்டவரைவு நிறைவேற்றப்பட்டது.

இதன்படி, சட்டவரைவுக்கு ஆதரவாக 121 வாக்குகளும், எதிராக 25 வாக்குகளும் அளிக்கப்பட்டன. (ம-இ)

## யாழ்.மாநகரில் சுழற்சிமுறையில் கழிவகற்றல்

யாழ்ப்பாணம், ஓக.7

யாழ்.மாநகரில் கழிவகற்றும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. வட்டார ரீதியாகக் கழிவகற்றும் வாகனங்கள் மூலம் கழிவுகள் சேகரிக்கப்பட்டு கழிவகற்றும் பணி சுழற்சிமுறை யில் மேற்கொள்ளப்படுகின்றது. (ச-25,17)

**பெண் வேலையாள் தேவை**

அரச உத்தியோகத்தரின் வீட்டில் தங்கி நின்று வேலை செய்வதற்கு 40-50 வயதிற்குட்பட்ட பெண் வேலையாள் தேவை.

தொடர்புகளுக்கு:
077 616 9786

**தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு**

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 20 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம். 1 ஏக்கர் 15 இலட்சம்.

தொடர்பு:- Whatsapp:- 0044 740 537 3526

(CS/58593) J-1

## சட்டவிரோதமாகக் கடத்தப்பட்ட 558கிலோ மாட்டிறைச்சி அழிப்பு

சட்டவிரோதமாகக் கொண்டுசெல்லப்பட்ட 558கிலோ நிறையுடைய மாட்டிறைச்சி வவுனியா மாநகரசபையால் நேற்றுமுன்தினம் கைப்பற்றப்பட்டுள்ளது. கிளிநொச்சியில் இருந்து வவுனியா நோக்கிப்பயணித்த தனியார் பேருந்தில் கொண்டுவரப்பட்டபோது சம்பவம் தொடர்பாக வவுனியா மாநகரசபைக்குப் பொதுமக்களால் மேற்கொள்ளப்பட்ட முறைப் பாட்டுக்கமைய இந்தச் செயல் முறியடிக்கப்பட்டது. அதனைக் கொண்டுவந்த நபர்கள்மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக மாநகரசபையின் முதல்வர் சு. காண்டீபன் தெரிவித்துள்ளார். (ச-110)

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.